Reigstered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி ஜபாற் பெட்டி எண் ‧ 49

மலர் 4 யாழ்ப்பாணம், சுபகிருது சித்திரை 7 ஆம் நாள் துலகஃதா 14 (20-4-62) வெள்ளிக்கிழமை இதழ் 68




சங்கக்கடைகள் மீதும்

# கடும் நடவடிக்கை

## விலைக்கட்டுப்பாடு அதிகாரிகளுக்கு மந்திரி உத்தரவு

### பாவனையாளர் எதிர்ப்பு இயக்கம் நிறுவ கோரிக்கை

கொழும்பு, வியாழன்

தனியார் துறையிலும் பொதுத் துறையிலுமுள்ள ஊழல்களைக் களைந்தெறிய அரசாங்கம் உறுதிகொண்டுள்ளது என்று இன்று காலை நடைபெற்ற, ஒரு மகாநாட்டில் உணவு மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன பேசுகையில் குறிப்பிட்டார். இம் மகாநாட்டில், விலைக் கட்டுப்பாட்டு இன்ஸ்பெக்டர்கள், அங்கத்தவர்கள், திடீர் பரிசோதகர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனங்கள் ஆகியவைகளுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமாறு மந்திரி உத்தரவிட்டார். கள்ள மார்க்கெட் வியாபாரிகளுக்கும் பதுக்கல்காரர்களுக்கும் எதிராக பாவனையாளர் எதிர்ப்பு இயக்கங்களை ஆரம்பித்து இவ் விஷயத்தில் உதவி புரியும்படியும் அவர்களை மந்திரி கேட்டுக்கொண்டார்.

## திரு. அண்ணாத்துரை வெற்றிக்கு எஸ். ஜே. வி. பாராட்டு

### "தமிழர் தலை நிமிர்ந்து வாழ வழி காட்டும்"

கொழும்பு, வியாழன்

இந்தியத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் அடைந்துள்ள வெற்றியைப் பாராட்டி தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி செல்வநாயகம், கழகத் தலைவர்களுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறார். திரு ஸி. என். அண்ணாத்துரைக்கு அனுப்பிய கடிதம் வருமாறு:-

"அன்புள்ள அண்ணாத்துரை அவர்களுக்கு;

தமிழ்நாட்டுத் தேர்தல் இயல்பாகவே எங்கள் அனைவரது கவனத்தையும் கவர்ந்தது. இந்நாட்டுத் தமிழ்ப் பேசும் மக்களுக்கு இந்நாட்டின் எல்லைக்கப்பால் நிகழ்ந்த சம்பவங்கள் மிக அக்கறையான சம்பவம் தமிழ்நாட்டுத் தேர்தலே. இத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் ஈட்டிய மகத்தான வெற்றியில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். உலகெங்கும் அல்லலுறும் தமிழினத்திற்கு நம்பிக்கை ஒளிவீசும் உங்கள் வெற்றி, தமிழர் வாழும் நாடுகளில் தலைநிமிர்ந்து வாழ வழி காட்டும். முன்னையோர் பெருமைமிக்க தமிழினத்திற்கு விட்டுச்சென்ற பாரம்பரிய பெருவிதிகளை எம் வருங்கால சந்ததிகளுக்கும் நிச்சயப்படுத்தி வைக்கும். இது எனது நம்பிக்கை.

ஈழத்தின் தமிழ்ப் பேசும் மக்களின் சார்பிலும், இலங்கை தமிழரசுக் கட்சி சார்பிலும் உங்கள் வெற்றியைப் பாராட்டுகிறேன். ராஜ்ய சபைக்கு நீங்கள் தெரிந்தெடுக்கப்பட்டது பற்றி நாங்கள் அனைவரும் மகிழ்ச்சியடைகிறோம். உங்கள் வெற்றி மேலும் வளர்வதாக.

அன்புள்ள,

சா. ஜே. வி. செல்வநாயகம்"

## மேலும் சீனர் ஊடுருவல்!

புதுடில்லி, ஏப்ரல் 19

இந்தியாவின் லடாக் பிரதேசத்தில் சீனர்கள் புதிய ஆக்கிரமிப்பை நடத்தியிருப்பதாயும், புதிய நிலை ஒன்றை அவர்கள் அமைத்துக் கொண்டிருப்பதாயும் அறிவிக்கப்பட்டது. உடனடியாக அவர்கள் அங்கிருந்து வெளியேற வேண்டுமென இந்தியா குறிப்பு ஒன்றை சீனாவுக்கு அனுப்பியுள்ளது.

## இளம்பிள்ளை வாதநோய்

### யாழ்ப்பாணத்தில் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், வெள்ளி

இளம்பிள்ளை வாதத்தினால் நேற்று ஒருவர் யாழ்ப்பாணத்தில் மரணமானர். யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அன்பழகன் என்ற இந் நோயாளி நிலைமை மோசமடையவே வீட்டுக்கெடுத்துச் செல்லப்பட்ட போது அங்கு மரணமானர்.

நாவாந்துறையிலும் நேற்று ஒருவருக்கு இந் நோய் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## ராணுவச்சட்ட மசோதா நிறைவேறியது

### ஏப்ரல் 26ம் தேதி மீண்டும் பார்லிமெண்ட் கூடும்

கொழும்பு, வியாழன்

ராணுவச் சட்டதிருத்த மசோதாவின் 2-ம் பரிசீலனை இன்று 25 அதிகப்படிவாக்குகளால் நிறைவேறியது. மசோதாவுக்குச் சாதகமாக 48 வாக்குகளும், பாதகமாக 23 வாக்குகளும் கிடைத்தன.

விவாதத்தை முடித்துவைத்துப் பேசுகையில் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்கா கூறியதாவது:-

"மக்களின் ஜனநாயக வாழ்வுக்கு தொந்தரவு விளைவிக்க அரசாங்கம் ராணுவத்தைப் பயன்படுத்தாது. ராணுவத்தை உபயோகிக்கும் அதிகாரம் கவர்னாஜெனரலிடம் இருப்பதால் குறிப்பிட்ட மந்திரி எவரும் ராணுவத்தைப் பயன்படுத்துவதென்பது முடியாது. ராணுவ சேவையை முற்றாகத் திருத்தியமைக்கும் வேலை பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. விரைவில் அது அமுலாக்கப்படும்".

கடற்படை மசோதாவின் 2-ம், 3-ம் வாசிப்பும் விமானப் படை மசோதாவின் 2-ம் வாசிப்பும் சபையில் நிறைவேறியது.

ஏப்ரல் 26-ம் தேதி பார்லிமெண்ட் மீண்டும் கூடி கமிட்டி நிலையில் மசோதாவைப் பரிசீலனை செய்யும்.

## இந்திய தொழில்நுட்ப நிபுணர் திரு. முத்துசாமி

### இலங்கையருக்கு பயிற்சி அளிக்க வந்துள்ளார்

கொழும்பு, வியாழன்

இந்தியாவிலுள்ள பிலாய் எஃகுப் பயிற்சித் தொழிற்சாலையின் சுப்பிறின்டன் திரு. ஆர். முத்துசாமி இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். இலங்கையிலுள்ள எஃகு கார்ப்பரேஷனில் பயிற்சித் திட்டமொன்றை வகுக்கு முகமாக சிலர் இங்கு வந்துள்ளார்.

திரு. முத்துசாமி இலங்கையில் இருக்கும் சமயம், எஃகு கார்ப்பரேஷனில் என்ஜினியரிங், தொழில்நுட்பம், விஞ்ஞானம் மற்றும் துறைகளிலுள்ள பயிற்சியாளர்களுக்கு ஒரு விசேஷப் பயிற்சி யொன்றை அளிக்க ஒழுங்குகள் செய்வார்.எனத் தெரிகிறது. இதில் பயிற்சி பெற்றவர்களுக்கு, இந்தியாவிலுள்ள எஃகுத் தொழிற்சாலை யொன்றில் மீண்டும் பயிற்சி யளிக்கப்படும்.

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் இங்கு வந்துள்ள இவர், இலங்கை எஃகுத் தொழிற்சாலையில் 'ரோலிங்மில்' நிறுவுவதிலும் உதவி செய்வார்.

## சாம்பமூர்த்தி மாஸ்கோ பயணம்

புதுடில்லி, ஏப்ரல் 19

மாஸ்கோவில் அடுத்தமாதம் 2-ம் திகதி முதல் 7-ம் திகதி வரை நடைபெறும் சர்வதேசப் பாட்டுப்போட்டியை நடத்து முகமாக பேராசிரியர் சாம்பமூர்த்தி மாஸ்கோ சென்றிருப்பதாய் அறிவிக்கப்பட்டது. இப் போட்டியை நடத்தும் கமிட்டியில் பேராசிரியர் சாம்பமூர்த்தி ஒரு அங்கத்தினர்.

## 406 மாணவர்களுக்கு தமிழில் பாட போதனை

### புசல்லாவ கல்லூரி பற்றி உதவி மந்திரி பதில்

கொழும்பு, வியாழன்

நியமன எம். பி. திரு. எஸ். தொண்டமானின் கேள்வியொன்றுக்கு, கல்விமந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. கருணாரத்ன இன்று பார்லிமெண்டில் பதிலளிக்கையில், புசல்லாவ ஹேலி டிறினிற்றி கல்லூரியில் மொத்தம் 678 மாணவர்கள் இருக்கிறார்களென்றும், அவர்களில் 406 மாணவர்களின் போதனமொழி தமிழென்றும் கூறினார்.

அவர் தொடர்ந்து பதிலளிக்கையில், குறிப்பிட்ட கல்லூரியில், மொத்தம் 26 ஆசிரியர்கள் உண்டென்றும், இவர்களில் 20 ஆசிரியர்கள் தமிழில் போதிக்கிறார்களென்றும் மாணவரின் சராசரி வரவின்படி தமிழ் மாணவர்களுக்கு 12 ஆசிரியர்கள் இருக்கவேண்டுமென்றும் கூறினார்.

திவுளப்பிட்டியா எம். பி. திரு. லக்ஷ்மன் ஜயக்கொடியின் கேள்வியொன்றுக்கு நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பதிலளிக்கையில், ஒரு இந்தியத் தொழிலாளி இந்தியாவுக்குச் செல்லவிரும்பினல், குடியேற்ற வெளியேற்ற இலாகா கட்டுப்பாட்டதிகாரிக்கு விண்ணப்பிக்கத் தேவையில்லையென்று கூறினர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: "இவர்களில் சிலர் இந்தியாவுக்குச் செல்ல அனுமதி கோரி குடியேற்ற வெளியேற்ற இலாகா கட்டுப்பாட்டதிகாரிக்கு விண்ணப்பித்துள்ளனர். இந்திய ஹைகமிஷனுடன் தொடர்புகொள்ளும்படி அவர்கள் கேட்கப்பட்டுள்ளனர். காரணம் பிரயாண தஸ்தாவேஜுகள், குடியேற்ற வெளியேற்ற இலாகா கட்டுப்பாட்டதிகாரியினல் வழங்கப்படுவதில்லை. இந்திய ஹைகமிஷன மூலமாகவே தான் வழங்கப்படுகிறது.

பாதுகாப்பு சபை

## 27-ம் தேதி காஷ்மீர் விவாதம்

புதுடில்லி, ஏப்ரல் 19

இம்மாதம் 27-ந் தேதி பாதுகாப்புசபைகூடி காஷ்மீர் பிரச்சினை பற்றி விவாதிக்கும். இதற்கிடையில், தாம் இப்போது இந்தியா வருவது பயனுள்ளதாக இருக்காது என கராச்சியிலுள்ள இந்திய ஹைகமிஷனரிடம் பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் அறிவித்திருக்கிறார்.

## என்ஜினியர் சங்கத்தை கண்டித்து தீர்மானம்

யாழ்ப்பாணம், வியாழன்

உள்ளூராட்சிச் சேவை மின்சார என்ஜினியர் சங்கம், யாழ்ப்பாண மாநகரசபையின் கீழ் கடமையாற்றும் என்ஜினியரைத் தாக்கியதைப்பற்றி, யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினர்களை அவதூறாகத் தாக்கி எழுதியிருப்பதைக் கண்டிக்கும் தீர்மானமொன்று யாழ்ப்பாண மாநகரசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கத்தினல் கொண்டுவரப்பட்ட இது சம்பந்தமான பிரேரணையை ஆதரித்து 7 பேரும் எதிர்த்து 6 பேரும் வாக்களித்தனர்.

காங்கேசன்துறை, வியாழன்

வர்த்தலை விளானில் ஒருவருக்கு இளம்பிள்ளை வாத நோய் கண்டிருப்பதாய் உடனடியாக தடுப்பு மருந்து அனுப்பி வைக்குமாறு மயிலிட்டி கிராம சபைத் தலைவர் திரு. சு. ஸ்ரீ பாஸ்கரன் சுகாதார சேவைகள் டைரக்டருக்கும், யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் சுப்பிறின்டனுக்கும் தந்திகள் அனுப்பியுள்ளார்.

## வரி விளம்பரம்

### கேள்வி விளம்பரம்

**மண்டைதீவு 2ம் இலக்க ஒழுங்கை வேலை**

1962-ம் ஆண்டு மே (வைகாசி) மாதம் 9-ம் திகதி காலை 10 மணி வரை மேற்படி வேலைக்கு சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் 8-5-62-ம் திகதி நண்பகல் 12 மணி வரை ரூபா 25/- கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். ஏனைய விபரங்களை எனது கந்தோரில் அறிந்து கொள்ளலாம்.

க. கைலாசபிள்ளை
அக்கிராசனர்.

அல்லைப்பிட்டிக் கிராமசபை,
மண்டைதீவு, 18-4-62.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் கிரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப்பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனும்.

**வைத்தியர் பரிபூரணானந்தர்.**
கைலாயபிள்ளையார்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

## விசேஷபடி நீக்கியதற்கு ஆட்சேபம்

கல்ஓயா, புதன்

கல்ஓயா பள்ளத்தாக்கில் கடமையாற்றும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு அங்கு தங்கியிருப்பதற்காக சென்ற 10 வருடங்களாக வழங்கப்பட்டு வந்த விசேஷ படியை அரசாங்கம் நிறுத்தியுள்ளது. இதை இங்குள்ள அரசாங்க உத்தியோகஸ்தர்கள் ஆட்சேபித்துள்ளார்கள்

தற்போது கல்ஓயாவில் மற்றய இடங்களைப்போல் வாழ்வதற்கான வசதிகள் ஏற்பட்டுள்ளபடியால் இவ்வித விசேஷபடி அவசியமில்லையென திறைசேரி தெரிவித்துள்ளதை ஆட்சேபித்து இவர்கள் தெரிவித்துள்ளதாவது:-

மற்றைய இடங்களை விடகல் ஓயாவில் வாழ்க்கைச் செலவு மிக அதிகரித்துள்ளது. கடந்த ஐந்து வருடங்களில் மக்கள் தொகை இங்கு அதிகரித்திருப்பதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

அம்பாறை, இங்கினியாகலை போன்ற முக்கிய நகரங்களில் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனல் பக்கத்திலுள்ள கல்முனை போன்ற நகரங்களில் வசிக்கவேண்டியிருக்கிறது. இங்கிருந்து காரியாலயங்களுக்குச் செல்வதற்கு அதிக செலவு செய்யவேண்டியிருக்கிறது.

## சம்பளம் உயர்ந்துள்ளது

### மத்திய வங்கி தகவல்

கொழும்பு, புதன்

மத்திய வங்கி நடத்திய பரிசீலனை ஒன்றின் போது இலிகிதர்கள், தொழிற்சட்ட சேவையாளர் ஆகியோரின் சம்பள விகிதங்கள் நூற்றுக்கு 22. 7 வீதம் அதிகரித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. குறைந்த நிலையிலுள்ள சேவையாளரின்சம்பள விகிதங்கள் 30. 4 வீதமும் மத்திய அரசாங்க உத்தியோகஸ்தர்களின் விகிதம் 22. 7 வீதமும் அதிகரித்துள்ளதாகவும் மத்திய வங்கியின் இந்த ஆராச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.

1952 லிருந்து சம்பள விகி

## இன்று உங்கள் பலன்

**-சோதிடஆசான்செ.தெல்லியூர்-**

சுபகிருது ஆண்டு சித்திரைத் திங்கள் 7-ந் தேதி வெள்ளிக் கிழமை (20-4-62)ஹிஜரி வருடம் 1381 ஜுல்கஃதாமாதம்14ம் பிறை.

இன்றுகாலை6-30வரை பூரணை. பின் அபரபட்சபிரதமை. காலை 7-09வரை சித்திரை நட்சத்திரம். பின்னர் சுவாதி. சித்தயோகம். இராகுகாலம் 10-32 முதல் 12-02வரை.

இன்று திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம் பூரம் ஆகியநட்சத்திரங்களுக்கு படுபட்சி நாளாகையால் இவர்கள் சுபகருமங்களை மேற்கொள்ளலாகாது.

### இராசிப்பலன்

சித்திரை சுவாதி:- இன்று இவர்களுக்குஊழியரால்உதவி, தொழில் நலம், பெரும் யோசனைகள், தைரியவீனம் ஆதியன காணப்படுகின்றன.

மேடம்: (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம்பாதம் முடிய) இன்று இவர்களுக்கு பிரயாண சுகம், வர்த்தகச் சிறப்பு, கொடுத்தகடன்வரவு தாமதம், உழைப்புக்கேற்ப நற்பலன் ஆதியன காணப்படுகின்றன.

இடபம்: (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருக சீரிடம் முன்னரை முடிய) இன்று இவர்களுக்கு தொழில் ஆதாயம், மதிப்புயர்ச்சி, நல்லோர் தரிசனம், கடன்பழுக்குறைதல், அனுவசிய செலவு ஆதியட காணப்படுகின்றன.

மிதுனம்: (மிருகசீரிடம் பின்னரை, திருவாதிரை, புனர்பூசம் முன்முக்கால் முடிய) இன்று இவர்களுக்கு [illegible] உறவினர் கொண்டாட்டம், சுப செய்திகள் கேட்டல், பொழுது சகமாகக் கழிதல், ஆரோக்கியம், நம்பிக்கைஏமாற்று, கடன் வரபு ஆதியன காணப்படுகின்றன.

கடகம்: (புனர்பூசம் 4-ம் பாதம், பூசம்,ஆயிலியம் முடிய) இன்று இவர்களுக்கு சுகம், விருந்து கொண்டாட்டம், விவாக சுபகரும செய்திகள், தார்மீகசெலவுஅதிகரிப்பு, கடன்படல் ஆதியன காணப்படுகின்றன.

சிங்கம்: (மகம், பூரம், உத்தரம், 1ம்பாதம் முடிய) இன்று இவர்களுக்கு தெய்வவழிபாடு, தார்மீக சிந்தனை, மதிப்பு, பிரயாணம், சுபசெய்தி, புண்ணிய செலவு ஆதியன காணப்படுகின்றன.

கன்னி: (உத்தரம் பின்முக்கால், அத்தம், சித்திரை முன்னரை முடிய) இன்று இவர்களுக்கு நற்கரும வெற்றி, மனோதைரியம், மாதுருவழி மனகசப்பு, குடும்பத்தில் சச்சரவு, ஊழியர்நன்மை ஆதியனகாணப்படுகின்றன.

துலாம்: (சித்திரைபின்னரை, சுவாதி, விசாகம் முன்முக்கால் முடிய) இன்று இவர்களுக்கு தொழிற் சிறப்பு, அசாத்திய யோசனை, மதிப்பு, எதிரிகள் இடர்விளைக்க முயல்தல், நல்லோர் தொடர்பு ஆதியன காணப்படுகின்றன.

விருச்சிகம்: (விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை முடிய) இன்று இவர்களுக்கு வர்த்தகநலம், மதிப்புயர்ச்சி, தைரியம், பணவரவு அலட்சியத்தால் பணநட்டம் ஆதியன காணப்படுகின்றன.

தனு: (மூலம், பூராடம், உத்தராடம்1ம்பாதம்முடிய)இன்று இவர்களுக்கு வாக்குவன்மை, உழைப்புக்கேற்ப வெற்றியும், மதிப்பும், ஊழியரால் தொழில்

தங்கள் அதிகரித்து வந்துள்ளதை மத்திய வங்கி ஆராய்ந்தது.

இதே காலப்பகுதியில் ஆரசினர் பள்ளிக்கூட ஆசிரியர்களின் சம்பள விகிதம் நூற்றுக்கு 17. 4 வீதம் உயர்ந்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

## விளையாட்டு விளையாகிற்று

### இரண்டு சிறுவர்களின் பரிதாப மரணம்

அக்கரைப்பற்று, வியாழன்

குண்டுகள் இணைக்கப்பெற்றிருந்த துப்பாக்கி ஒன்றுடன் விளையாடிய இரு சிறுவர்கள் மரணமான பரிதாப சம்பவமொன்று இங்கு நடைபெற்றது. மீரா லெப்பை என்னும் 14 வயதுச் சிறுவனும், அப்துல் அமீர் என்னும் 10 வயதுச் சிறுவனுமே இவ்வாறு பரிதாப மரணத்துக்குள்ளானவர்கள்.

சம்பவம் நிகழ்ந்த தினம் பிள்ளைகள் இருவரும் பொன்னம்வெட்டையிலுள்ள வயல் நிலமொன்றுக்கு அருகாமையிலுள்ள குடிசையொன்றில் இருந்தார்களாம். ஒலுவிலைச் சேர்ந்த சவிரித்தம்பி என்பவர் அன்றைய தினம் வேட்டைக்குச் சென்று திரும்பியிருந்தார். அன்று வேட்டையில் எதுவும் அவருக்குக் கிடைக்கவில்லை. வயல் வெளிக் குடிசையின் பக்கமாக உட்கார்ந்தவர், துப்பாக்கியை அதிலேயே விட்டுவிட்டு மீன்பிடிக்கச் சென்றார்.

சவரித்தம்பி இல்லாதநேரம் பார்த்து அப்துல் லத்தீப் என்னும் சிறுவன் துப்பாக்கியை எடுத்து வைக்கோல் போர் ஒன்றை நோக்கிக் குறிவைதான். மீரா லெப்பைமீது குண்டு பாய்ந்து அவரை ஸ்தலத்திலேயே கொன்டது. அப்துல் அமீர் காயமடைந்தார். அப்துல் அமீரின் தந்தையும் சவிரித்தம்பியும் துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டுக் குடிசைக்குத் திரும்பினர்கள். இரு பையன்களும் இரத்த வெள்ளத்தில் கிடந்ததையும் அப்துல் லத்தீப் பயத்தால் நடுங்கிக்கொண்டு நின்றதையும் கண்டார்கள். காயமுற்ற அப்துல் அமீர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு மரணமானர்.

விபத்து காரணமாக மரணம் சம்பவித்ததெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## வெளிநாட்டு உதவியுடன்

### மீன் விநியோகத்திட்டம்

கொழும்பு, புதன்

இலங்கையின் சகல பகுதிகளிலும் நல்ல மீன்கள் எந்நேரமும் கிடைக்கக் கூடிய வகை செய்யும் முறையில் சகல இடங்களிலும் மீன் விநியோகநிலையங்களை நிறுவுவதற்குஅரசாங்கம்வெளிநாட்டிலிருந்து நிதி உதவி கோரவிருக்கிறது. தற்பொழுது எந்தக் கிராமங்களில் மீன் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோ, அந்தப் பகுதிகளிலேயே முதலில் மீன் விநியோக நிலையங்களை அரசாங்கம் நிறுவும்.

வெளிநாட்டு அரசாங்கங்களிடமிருந்தும் தனிப்பட்டவர்களிடமிருந்தும் பங்கு அடிப்படையில் நிதி உதவி பெற அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

தாமதம், மேன்மை ஆதியன காணப்படுகின்றன.

மகரம்: (உத்தராடம் பின் முக்கால்,திருவோணம், அவிட்டம்முன்னரை முடிய) இன்று இவர்களுக்கு கடன் வரவு, உறவினரால் அவப்பெயரும், சச்சரவும், முயற்சி வெற்றி, தொழிற்சிறப்பு, ஆதாயம்ஆதியன காணப்படுகின்றன.

கும்பம்: (அவிட்டம் பின்னரை, சதயம், பூரட்டாதிமுன்முக்கால் முடிய) இன்று இவர்களுக்கு பகைமறைந்து சமாதானமடைதல், கடும்உழைப்பு, பலன் மத்திமம், வாகன சுகம், தெய்வழிபாடு ஆதியனகாணப்படுகின்றன.

மீனம்:(பூரட்டாதி 4ம்பாதம், உத்தரட்டாதி, ரேவதி முடிய) இன்று இவர்களுக்கு சந்தாஷம், வியாபாரநலம்,ஆதாயம், பணவரவு,தைரியச்சிறப்பு, பிரயாணம், நண்பரை நம்பி ஏமாறல் ஆதியன காணப்படுகின்றன.


அம்மா எனக்கு தினந்தோறும் மாமைட் தருகிறதால், வகுப்பிலும் விளையாட்டுக் களத்திலும் நான் சுறுசுறுப்பாய் இருக்கிறேன்



நாம் யாவரும் நன்றாய் சாப்பிடுகிறோம். அதிக சக்தியும் பெலனும் உள்ளவர்களாய்இருக்கிறோம். பலத்திற்கும் வீர்யத்திற்கும்உங்கள் தினசரி ஆகாரத்தில் ஒரு பாகமாக நீங்கள் மாமைட்டை தினசரி அருந்தி வரவேண்டும்.

மாமைட் வெந்நீரில் அருந்தப்படலாம். உங்களுக்கு விருப்பமானல் கொஞ்சம் எலுமிச்சம் பழச்சாறும் சேர்த்து அல்லது தாளித்துச் சாப்பிடலாம். மாமைட்டை ரொட்டியிலோ அல்லது பிஸ்கட்டிலோ பட்டரோடு அல்லது பட்டரின்றி இலேசாகத் தடவி சாப்பிடலாம். மாமைட்டை சுப் கறி முதலியவற்றில் சேர்க்கும பொழுது அதிகப்படியானருசியை மட்டுமின்றி உங்கள் தினசரி ஆகாரத்தைச் சமைக்கும் பொழுது தேவையான விட்டமின் பி சத்துக்களையும் கூட்டிக் கொள்கிறீர்கள்.

மாமைட் பி வர்க்க
விட்டமின்களை
ஏராளமாகக் கொண்ட
ஓர் காய்கறி ஆகாரம்.




# மாமைட்

# நேபாளத்தின் உள் விவகாரத்தில் தலையிடும் எண்ணம் இல்லை

## மன்னர் மகேந்திரருக்கு ராஜன்பாபு விளக்கம்

புதுடில்லி, ஏப். 19

"நேபாளத்தின் உள் விவகாரங்களில் தலையிடும் எண்ணம் இந்தியாவுக்குக் கிடையாது" என்று இந்திய ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திர பிரஸாத் நேற்றிரவு நேபாள மன்னர் மகேந்திரருக்கும் ராணி ரத்னாவுக்கும் அளித்த ராஜாங்க விருந்துபசாரத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

நேபாளத்துக்கும் இந்தியாவுக்குமிடையில் இப்பொழுது தோன்றியுள்ள சிறு சிறு வேறுபாடுகள் விரைவில் நீங்கிவிடுமென்று டாக்டர் ராஜேந்திர பிரஸாத் நம்பிக்கை தெரிவித்தார்.

"சுதந்திரம், சுயநிர்ணய உரிமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவைகள் நேபாளத்துக்கும் இந்தியாவுக்கும் பொதுவானவை" என்று டாக்டர் ராஜேந்திர பிரஸாத் கூறினார். இரு நாடுகளின் பொது அடிப்படை நலன்களும் பாதுகாக்கப்படவேண்டுமென அவர் தெரிவித்தார்.

நேபாளத்தின் பண்பும் மரபும் தவறாமல் நேபாளம் முன்னேற்றமடைய வேண்டுமென்றும் நேபாளத்தின் முன்னேற்றத்தை இந்தியா மகிழ்ச்சியோடு பார்த்துக்கொண்டிருக்கிறதென்றும் டாக்டர் பிரஸாத் கூறினார்.

இதற்கு மன்னர் மகேந்திரர் பதிலளித்துப் பேசுகையில், நேபாளம் தனது பண்பும் மரபும் தவறாமல் முன்னேறி வருகிறதென்றார். நேபாளத்தின் உள் நிலைமையைத் தெரிந்து கொள்ளாமல், நேபாளத்தைப் பற்றி நேச நாடுகள் அபிப்பிராயம் தெருவிக்காமலிருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். நேபாளத்தின் முன்னேற்றத்துக்கு அதன் நேச நாடுகள் ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று மன்னர் கூறினார். இந்தியாவுக்கும் நேபாளத்துக்குமிடையிலுள்ள கற்பனைப் பிளவுகள் நீங்கிவிடுமென்றும் மன்னர் நம்பிக்கை தெரிவித்தார்.

---

அங்கோலா

### ஒரு வருடத்தில் 90 ஆயிரம் பேர் கொலை

நியுயோர்க், ஏப். 18

அங்கோலாவில் யுத்த கால நிலைமை பூரணமாக இருப்பதாயும், 1961-ம் ஆண்டுக்குப் பின் 90,000 பேர் கொல்லப்பட்டார்கள் என்றும் ஐ. நா. விசேஷ கமிட்டி சாட்சியம் அளிக்கப்பட்டது.

---

### மாதர் கழகம் ஆண்டுவிழா

புங்குடுதீவு, புதன்

புங்குடுதீவு வல்லன் மாதர் கழகம் வல்லன் கிராமமுன்னேற்றச் சங்கம் ஆகியவற்றின் வருடாந்த விசேஷ பொதுக் கூட்டம் புதுவருடத் தினத்தன்று சங்க மண்டபத்தில் கிராமமுன்னேற்றச்சங்க உபதலைவர் க. ஐயம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

கிராமமுன்னேற்ற சங்க காரியதரிசி திரு.க.ஐயாத்துரை தமது சென்ற கூட்டறிக்கையை வாசித்து கிராமமுன்னேற்ற சங்கத்தால் நிகழவேண்டிய அபிவிருத்திகளைப் பற்றிக் குறிப்பிட்டார். டாக்டர் சி. கணேஸ் மாதர்களின் நிலையையும் மாதர்களின் தையல் கலையையும் மாதர் கழகத்தின் முன்னேற்றங்களைப் பற்றியும் விரிவுரையாற்றினர். ஆசிரியர் மு. நடராசா கிராமமுன்னேற்ற சங்க முன்னேற்றத்தைப் பற்றி உரை நிகழ்த்தினர்.

அகில இலங்கை விவசாய முன்னேற்றக் கழக செயலாளரானக. பொன்னம்பலம் கிராம முன்னேற்ற சங்கத்தினல் நடத்தப்படவேண்டிய பொருளாதார திட்டங்களையும் அங்கு மக்களுக்குச் செய்யவேண்டிய ஆக்கவேலைகளையும் மாதர் கழகம் வளர்ச்சியடையச் செய்ய வேண்டிய முறையைப்பற்றியும் எடுத்து விளக்கினர். மாதர்கழக காரியதரிசி நா. ஜெயலட்சுமியின் தலைமையில் நடனம், நாடகம், பேச்சு முதலியன நடைபெற்றன.

---

### யாழ்ப்பாணம் வீடுகளில் மர்ம திருட்டு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் இப்பொழுது மர்மத் திருட்டுகள் பல வீடுகளிலும் நடைபெறுவதாகவும் திருடர்கள் தேவையான பொருட்களைத் தேர்ந்தெடுத்துச் செல்வதாகவும் தெரிகிறது. இத்திருட்டுச் சம்பவங்களைத் தவிர்ப்பதற்காக பொலிசார் இரவு பாதுகாவல் ஏற்பாட்டை வலுப்படுத்தியிருக்கிறார்கள்.

சென்ற இரவு சுண்டிக்குளிச் சந்தியில் இருக்கும் முன்னாள் மதுபரிபாலனத் தீர்வை இன்ஸ்பெக்டரான திரு. நதானியல் வீட்டின் படுக்கையறையில் ஒரு ஆசாமி காணப்பட்டாரெனவும், அவர் கண்டி வீதிவழியாக ஓடிச் சென்றபோது துரத்திக்கொண்டு சென்றதும் அவர் மறைந்துவிட்டதாகவும் தெரிகிறது.

இப்படியான திருட்டுச் சம்பவங்கள் அடிக்கடி நடப்பதால் இதைக் கண்டுபிடிப்பதில் பொலிசார் சில விசேஷ ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள்.

---

## நவீன முறையில் மீன் பிடிப்பு

### இராமேஸ்வரத்தில் சாதனை

இராமேஸ்வரம், ஏப். 18

எங்குமில்லாத முறையில் இந்தியாவில் மீன் பிடிக்கப்படுகின்றது. நவீன சாதனங்களைக்கொண்டு நூதன முறையில் இராமேஸ்வரத்தில் மீன் பிடித்துவருகிறார்கள். வழக்கத்திலும் பார்க்க இப்போது ஏராளமான மீன் பிடிபடுகிறது. மீன்பிடிக்காரர்கள் பெரிதும் மகிழ்ச்சியடைந்துள்ளார்கள்.

'ட்ரோலர்' எனப்படும் பெரிய மீன்பிடிப் படகுகள் மீன் பிடிப்பதற்கு உபயோகிக்கப்படுகின்றன. இந்த நவீன படகு மீன்பிடி முறையால் தமிழ் நாட்டில் எங்கும் பிடிபடாத அளவு காரல், கத்தாலை, பன்னு, வாவல். சுரு ஆகிய மீன்களும் இதர சிறு மீன்களும் ஏராளமான அளவு பிடிபடுகின்றன. சராசரி 1500 கிலோ கிராம் பிடிபடுகிறது.

1957-ல் அமெரிக்க மீன்பிடி நிபுணர் ஒருவர் இங்கு வந்து மீன் பிடிப்புத் தொடர்பான ஆராய்ச்சி நடத்தினர். அதில் இப்பகுதியில் 300 சதுர மைலுக்கு அதிக கடல் பரப்பில் மீன பிடிக்கலாம் என்று கண்டு பிடித்தார். அது சம்பந்தமாக இராமேஸ்வரம் உட்துறை மீன்பிடிப்புக் கண்காணிப்பாளர் திரு. டேவிட்சன் தாமஸ் மேலும் ஆராய்ச்சி செய்ததில் மேற்படி படகு மீன்பிடிப்பு முறை வெற்றி அளித்தது. நைலோன் வலையைக்கொண்டு மீன் பிடிப்பதற்கு ரூபாய் 5000 செலவானல், பெரும் படகு மீன்பிடியால் ரூபாய் 500 தான் செலவாகும். அத்தோடு படகு முறையால் பெருந்தொகையான மீன்களையும் பிடிக்கலாம்.

பை போன்று செய்யப்பட்ட வலைகளை 'ஆட்டர் கட்டைகள்' என அழைக்கப்படும் ஒருவித கட்டைகளோடு இணைத்து மேற்படி பையைத் திறந்தவாறு அமைத்துக் கடல் ஆழத்தில் எடுத்துச் செல்லும்போது அதிக அளவில் மீன் பிடிபடுகிறது.

'ட்ரோலர்' முறையின் மூலம் தினசரி எப்பொழுதும் அதிக அளவிலேயே மீன் பிடிபடும்.

உள்துறை மீன் பிடிப்புக் கண்காணிப்பாளர் திரு. டேவிட்சன் தாமஸ் 'ட்ரோலர்' மீன் பிடிப்பு முறையில் ஏராளமானவர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளார்.

---

## மேற்கு இரியான் விடுதலைக்கு படைகள் தயார்

### இந்தோனேஷிய தளபதி தகவல்

ஜாகர்த்தா, ஏப். 19

மேற்கு இரியானை விடுதலை செய்வதற்கு படை நடவடிக்கை எடுப்பதற்கான திட்டங்கள் யாவும் பூர்த்தியாகிவிட்டனவென்றும் எந்நேரம் உத்தரவு கிடைக்கிறதோ அந்த உடனேயே மேற்கு இரியான் விடுவிக்கப்படுமென்றும் இந்தோனேஷிய மேற்கு இரியான் விடுதலைப் படைத் தளபதி நேற்று தெரிவித்தார்.

மேற்கு இரியான் சம்பந்தமாக டச்சு அரசாங்கத்துடன் ராஜீய அந்தஸ்தில் இனி பேச்சுவார்த்தை நடத்துவதில் பயன் கிடைக்குமென்று இந்தோனேஷியா நம்பவில்லை என இந்தோனேஷிய வெளிவிவகார மந்திரி டாக்டர் சுபந்திரியோ கூறினர். மேற்கு இரியான் சம்பந்தமாக திரு. பங்கர் சமர்ப்பித்த சமரசத் திட்டத்தை டச்சு அரசாங்கம் நிராகரித்துவிட்டதென்பதையும் டாக்டர் சுபந்திரியோ சுட்டிக் காட்டினர்.

---

### தலையணைக்குக் கீழ் வைக்கப்பட்டிருந்த தாலி

#### திருடப்பட்டதாகப் புகார்

யாழ்ப்பாணம், வெள்ளி

சிவியாதெருவைச் சேர்ந்த திருமதி சவுந்தரவதி சிவநேசன் என்பவருக்குச் சொந்தமான ரூ. 1300 பெறுமதியான பவுண் தாலிக்கொடியை இரவில் யாரோ திருடிச் சென்றுவிட்டதாகப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

திருமதி சவுந்தரவதியும் பிள்ளைகளும் இரவில் தூங்கிக் கொண்டிருக்கும்போது இச் சம்பவம் நடைபெற்றதாகத் தெரிகிறது. தலையணைக்குக் கீழ் வைக்கப்பட்டிருந்த இத்தாலிக் கொடி காலையில் திருடப்பட்டிருக்கக் காணப்பட்டதாம். பொலிசார் புலன் விசாரிக்கின்றனர்.

---

பாகிஸ்தான்

### நிபந்தனையின்றி விடுதலை செய்க

டாக்கா, ஏப். 18

தடுப்புக்காவலில் விசாரணையின்றி வைக்கப்பட்டிருக்கும் அரசியல்வாதிகள், பத்திரிகையாளர்கள், மாணவர்கள் ஆகியோரை உடனடியாக நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டுமென, டாக்கா உயர் நீதிமன் வழக்கறிஞர் சங்கம் பாகிஸ்தான் அரசாங்கத்தைக் கோரி ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

---

### ஜெனிவா மகாநாடு வெற்றிக்கு இந்தியா பாடுபடும்

#### பார்லிமெண்ட் கலப்புக்கூட்டத்தில் ராஷ்டிரபதி உரை

புதுடில்லி, ஏப்ரல் 18

பார்லிமெண்டின் இரு சபைகளும் அடங்கிய கலப்புக் கூட்டத்தில் ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திர பிரஸாத் இன்று உரை நிகழ்த்தினர்.

ஜெனிவா படைகுறைப்பு மகாநாட்டின் முன்னேற்றத்திற்கும், வெற்றிக்கும் இந்தியா இயன்றவரை பாடுபடும் என அப்போது அவர் கூறினர். பதவியிலிருந்து விலகும் டாக்டர் பிரஸாத் நிகழ்த்தும் கடைசி உரை இதுவேயாகும். முதலில் ஹிந்தியிலும், பின் ஆங்கிலத்திலும் அவர் உரை நிகத்தினர். பஞ்சாயத்து ஆட்சி முறை மேலும் 4 ராஜ்யங்களில் அமுல் செய்யப்படும் என்றும், ஏற்கனவே 8 ராஜ்யங்களில் அது அமுலாக்கப்பட்டுள்ளதென்றும் ராஷ்டிரபதி கூறினர். நாட்டில் ஏற்படவிருக்கும் பல தொழில் அபிவிருத்திகளையும் அவர் குறிப்பிட்டார்.

---

## இரகசிய ராணுவ ஸ்தாபனத்தை முறியடிக்க டிகோல் நடவடிக்கை

அல்ஜியர்ஸ், ஏப்ரல் 19

அல்ஜீரியாவின் புதிய ஹைகமிஷனர் பாரிசுக்குச் சென்று ஜனாதிபதி டிகோலுடன் ஆலோசனை நடத்திய பின் அல்ஜீரியா திரும்பியுள்ளார்.

அல்ஜீரியாவில் பலாத்கார நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருக்கும் அல்ஜீரிய விடுதலையை எதிர்க்கும் ஐரோப்பிய தீவிரவாதிகளின் இரகசிய இராணுவ ஸ்தாபனத்தினரை அடக்கி ஒடுக்குவதற்கு ஜனாதிபதி டிகோலிடமிருந்து புதிய உத்தரவுகளை ஹைகமிஷனர் பெற்றுக்கொண்டுவந்திருப்பதாகத் தெரிகிறது.

அல்ஜீரிய விவகாரங்களுக்கான பிரஞ்சு மந்திரியும் பாரிசிலிருந்து அல்ஜீரியா வந்துள்ளார்.

இவ்வார முடிவுக்குள் இரகசிய இராணுவ ஸ்தாபனத்தினரின் நடவடிக்கைகளை முறியடிப்பதற்கு பிரஞ்சு பாதுகாப்புப் படைகள் கடும் நடவடிக்கையிலிறங்குமென நம்பப்படுகிறது.

---

### புத்தாண்டில் தற்கொலை

பையகலை, புதன்

புஹண்டமுல்லை என்ற இடத்தைச் சேர்ந்த 35 வயதுள்ள டி. டினேரிஸ் என்பவர் புதுவருடத்தினத்தன்று நச்சுத்திரவகம் உட்கொண்டு தற்கொலை செய்துகொண்டார்.

மரணவிசாரணையின் போது தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

---

மாஸ்கோ, ஏப் 19

சோவியத் யூனியன் விடுத்த அழைப்பை ஏற்று ஐ. நா. பதில்தலைமைக் காரியதரிசி யு. தாண்ட் இவ்வருடம் ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதத்தில் மாஸ்கோ செல்வார்.

ஜூன் அல்லது ஜூலைமாதத்தில் யுதாண்ட் ஜெனிவாவுக்கும் விஜயம் செய்வார்.

---

## காமன்வெல்த் பிரதமர்கள் செப்டம்பரில் கூடுவார்கள்

### இலங்கை சம்மதம் அளித்துள்ளது

கொழும்பு, வியாழன்

காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு இம்மாதம் செப்டம்பரில் கூடுவது ஏற்றதாக இருக்குமாவென இலங்கை அரசாங்கத்தை பிரிட்டிஷ் அரசாங் கேட்டிருந்தற்கு இலங்கை அரசாங்கம் செப்டம்பரில் பிரதமர் கலந்துகொள்ளக் கூடியதாகவிருக்குமெனத் தெரிவித்துள்ளது.

லண்டனில் நடைபெறவிருக்கும் இம் மகாநாட்டில் பிரிட்டன் ஐரோப்பிய பொதுச் சந்தையில் கலந்துகொள்வது பற்றி முக்கியமாக விவாதிக்கப்படும். இது சம்பந்தமாக காமன்வெல்த் பிரதமர்களின் அபிப்பிராயங்களை அறிந்து கொள்ள பிரிட்டிஷ் அரசாங்கம் விரும்புவதாக அறியப்படுகிறது.

---

### தேசிய நடன விழா

கொழும்பு, புதன்

வருகிற 22 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு சுதந்திர ஞாபகார்த்த மண்டபத்தில் 400 கலைஞர்களைக் கொண்ட தேசிய நடன விழா ஒன்று நடைபெறும். சிங்கள-தமிழ் புத்தாண்டை முன்னிட்டு அமையும் இந்த வைபவத்தில் கவர்னர் ஜெனரல், பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா ஆகியோர் கலந்து கொள்வார்கள். சுகாதார மந்திரி திரு. ஏ. பி. ஜயசூரியா தலைமையில் இக்கலாச்சார கண்காட்சி நடைபெறும். இந்து பௌத்த சமயங்களைப் பற்றிக் கூறும் நடனங்கள் விழாவில் இடம்பெறும் 25,000 பேர்நிகழ்ச்சிகளைக் காண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

**மண வாக்கு**

"பரமபிதாவே! இவர்களை மன்னியுங்கள். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே!"

—சிலுவையில் இயேசு.


# ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு சித்திரை 7 மீ உ (20-4-62)


## தோட்டப் பள்ளிகள்

தோட்டப் பள்ளிக்கூடங்களின் அவல நிலைபற்றி உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. எம். சிவசிதம்பரம் பார்லிமெண்டில் ஒரு தீர்மானம் கொண்டுவந்து உண்மை நிலைமையை அம்பலப் படுத்தியதற்காக, தோட்டத் தொழிலாளர் சமூகத்தின் நன்றி அவருக்கு உரித்தாகும்.

மலைநாட்டிலுள்ள தமிழ்த் தோட்டத் தொழிலாளரின் குழந்தைகளுக்குத் தகுந்த கல்வி அளிக்க வேண்டுமென்று கேட்டு ஆறு யோசனைகளைக் கூறியுள்ளார். (1) எல்லாத் தோட்டப் பள்ளிக்கூடங்களையும் இரு நேரப் பாடசாலையாக்க வேண்டும். (2) தோட்டங்களிலுள்ள எல்லாக் குழந்தைகள் பற்றியும் கட்டாயக் கல்வி விதியை அமுல் நடத்த வேண்டும். (3) தோட்டப்பள்ளி ஆசிரியருக்குப் போதிய சம்பளம் கொடுக்க வேண்டும். (4) தோட்டப்பள்ளிகளில் போதிய ஆசிரியர்களை நியமிக்கவேண்டும். (5) தோட்டப் பள்ளிக்கூட ஆசிரியர் நியமனம், வேலை நீக்கம் இவற்றைக் கட்டுப் படுத்த வேண்டும். (6) படிப் படியாகத் தோட்டப் பள்ளிக்கூடங்களை அரசாங்கப் பள்ளிகளாக மாற்றவேண்டும். இந்த ஆறு யோசனைகளும் மிகவும் மிதமானவை. ஆனாலும் இவற்றில் இரண்டொன்றையும் கூட அரசாங்கம் ஏற்று நடவடிக்கை எடுக்குமா என்பது நிச்சயம் இல்லை.

தாம் இத்தீர்மானத்துக்கு முன் அறிவித்தல் செய்தபோது, கல்விக் கமிஷனின் இடைக்கால அறிக்கை வெளியாகவில்லை என்று, உடுப்பிட்டி மெம்பர் தெரிவித்தார். அந்த அறிக்கையில் இரு யோசனைகள் இவ்விஷயமாகக் கூறப் பட்டுள்ளன. ஒன்று தோட்டப் பள்ளிக்கூடங்களை அரசாங்கம் பொறுப்பேற்கப்படாது, இரண்டாவதாக நாடற்றவர்களின் குழந்தைகளுக்கு அவர்களின் தாய்மொழியான தமிழ் மூலம் கல்வி கற்பிக்கக் கூடாது. இவை இரண்டும் அமுலுக்கு வருமாயின், தோட்டப் பள்ளிக்கூடங்களின் நிலைமை இப்போதுள்ளதை விட மோசமாவதுடன், அங்குள்ள குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வியும் கூட கிடைக்க முடியாதுபோகும்.

கல்விக் கமிஷனின் இந்த இடைக்கால அறிக்கையைப் பற்றி விசாரித்ததில், அந்த யோசனைகள் முடிவானவையல்லவென்றும், பொது மக்களின் கருத்தை அறிய வெளியான ஒரு "காற்றாடியே" என்றும் பொறுப்பு வாய்ந்தவரொருவர் தெரிவித்தார். கல்விக் கமிஷனின் மேற்குறித்த இரு யோசனைகளையும், நியாய புத்தி படைத்த சிங்களவர்களே கண்டிக்கின்றனர். திரு. வில்மட் பெரேரா, இந்த யோசனைகள் சர்வதேச குழந்தைகள் உரிமை சாஸனத்துக்கு மாறுகுமென்றும், அவர்களை வேற்றுமையாக நடத்தக் கூடாதென்றும் பகிரங்கமாக எடுத்துச் சொன்னார். பார்லிமெண்ட் சபையிலும், பலர் மலைநாட்டு தமிழ்க் குழந்தைகளுக்கு நல்ல கல்வி அளிக்கவேண்டுமென்றும், பிரஜா உரிமை தீர்மானமாகவில்லை என்ற காரணத்துக்காக அவர்களை மிருகங்கள் போல் நடத்தக்கூடாதென்றும் தெல்தெனியா பிரதிநிதி இடித்துச் சொன்னார்.

பொதுஜன அபிப்பிராயம், கல்விக் கமிஷனின் மேற்குறித்த யோசனைக்கு மாறுகவே இருப்பதால், அந்த இரு சிபார்சுகளும் நிராகரிக்கப்பட வேண்டும். சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மாவனல்லைப் பிரதிநிதி கூட, மேற்குறித்த தீர்மானத்தைத் தாம் எதிர்க்கவில்லையென்றும் கூறி, யாராக இருப்பினும் அவர்களுக்குக் கல்வி அளிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தையே சார்ந்ததென்றும் ஒப்புக்கொண்டார். அரசியல் நோக்கங்களை விட்டு, மனிதாபிமானக் கண்ணுடனேயே அரசாங்கம் இவ்விஷயத்தைத் தீர்மானிக்க வேண்டும்.

இன்று பெரிய வெள்ளிக்கிழமை

# மரணத்தை வென்ற மாவீரன்

—வண. வ. தியோகுப்பிள்ளை அடிகள்—

இற்றைக்கு 1962 ஆண்டுகளுக்குமுன் கிறிஸ்துநாதர் பலஸ்தீன தேசத்தின் ஒருசிறியகிராமமாகிய பெத்தலேகம் என்னுமூரில் பிறந்தார். 30 வருடங்களாக மறைந்து சீவியம் நடத்தியபின் மூன்று வருடங்கள் பரலோக இராச்சியத்தைப் பற்றிநாடெங்கும் திரிந்துபோதித்தார். தமது போதகத்தைப் பல புதுமைகளைச் செய்துஉறுதிப்படுத்தினர். குருடருக்குப் பார்வையையும், செவிடருக்குக் கேள்வியையும் கொடுத்தார்; சப்பாணிகளை நடக்கச் செய்தார்; மரித்தோரைக்கூட உயிர்ப்பித்தார். அவர்மேல் பொருமைகொண்ட யூத மத அதிகாரிகள் அவருடைய போதனைகளை நிர்மூலமாக்க முனைந்தனர். பொதுமக்கள் அவர்மேற் கொண்டிருந்த அமோகப் பற்றுதலை அழித்துவிட சூழ்ச்சிசெய்தனர். துவேஷத்தால்தூண்டப் பெற்று அவரை ஒரு துரோகியாக உரோமைச் சக்கரவர்த்தியின் பிரதிநிதியாக நட்டை ஆண்டுவந்த பிலாத்துஎன்னும் தேசாதிபதியிடம் கையளித்து, அவரைச் சிலுவையிலறைந்து கொல்லும்படி செய்தனர். யேசு கிறிஸ்துநாதர் சிலுவையிலே உண்மையாகவேமரித்தார் என்பதில் எள்ளளவேனும்சந்தேகமில்லை. இதற்கு அத்தாட்சியாகப் போர்ச்சேவகனொருவன் அவருடைய விலாவவைக் குத்தித் திறந்தபோது, அவருடைய இருதயத்திலிருந்து இரத்தமும், நீரும் வடிந்தன. அன்றியும் அவர் உண்மையாகவே இறந்துவிட்டார் என்பதை நிச்சயப்படுத்தியபின்புதான் அவரைச் சிலுவையினின்றிறக்கிஒரு கல்லறையில் நல்லடக்கம் செய்வதற்கு பிலாத்து அனுமதியளித்தான். தங்களுடைய சதித்திட்டம் பலித்துவிட்டதெனயூதமத அதிகாரிகள் ஆனந்தம் கொண்டனரெனுனிம், அவர்கள் மனதை ஓர் இரகசிய அச்சம் உறுத்தியது. எனவே பிலாத்துவிடம் சென்று அதைத்தெரிவித்தனர். "ஆண்டவனே! அந்த வஞ்சகன் உயிரோடு இருக்கையில் மூன்று நாளைக்குப்பின் உயிர்ப்பேனஎன்று சொன்னது எங்கள் ஞாபகத்திலிருக்கிறது. ஆகையால், ஒருவேளை அவனுடைய சீஷர்கள் வந்து அவனை களவாய்க்கொண்டுசென்று, மரித்தோரினின்று உயிர்த்தான் என்று சனங்களுக்குச் சொல்லாதபடி, மூன்று நாள் மட்டும் கல்லறையைக் காவல்பண்ணக் கட்டளையிட்டருளும் இல்லாவிட்டால் பிந்தின மோசம் முந்தின மோசத்திலும் அதிகம் கெடுதியாக இருக்கும்" என்றார்கள். அதற்கு பிலாத்து "உங்களுக்கு காவற் சேவகர்கள் உண்டே. நீங்கள் போய் உங்களுக்குத் தெரிந்தபடி காவல்செய்துகொள்ளுங்கள்" என்றான் ஆகையால் அவர்கள் போய் கல்லின்மேல் முத்திரையிட்டு காவற்சேவகர்களைவைத்து கல்லறையைப்பத்திரப்படுத்தினர்கள்" (மத்தேயு 27ம் அதிகாரம் 63—66 வசனங்கள்) மரணமடைந்து கல்லறையில் அடக்கஞ் செய்யப்பட்ட ஒருவன் மரணத்தை வென்று மறுபடியும் உயிர்த்து எழுவானென்ற அச்சத்தினல் அடக்கஞ் செய்யப்பட்ட கல்லறையைப் பத்திரப்படுத்திக் காவல் செய்யும்படி போர்ச் சேவகர்களை நிறுத்தியமை உலக சரித்திரத்தில் இதுவே முதற் தடவையாகும்.

யேசுகிறிஸ்துநாதர் கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டது ஒரு வெள்ளிக்கிழமை இரவாகும். போர்ச் சேவகர்கள் அந்த இரவு முழுவதும் மறுநாள் இரவும் தமது கடமையை வெகு விழிப்புடன்செய்துவந்தார்கள். ஆனல், ஞாயிறு வாரம் அதிகாலையில் ஒரு பெரிய பூகம்பம் உண்டாயிற்று. ஆண்டவருடைய தூதன் வானத்தில் நின்று இறங்கிவந்து யேசுநாதர் அடக்கம் செய்யப்பட்டிருந்த கல்லறையை மூடிப் பிரமாண்டமான கல்லைப்புரட்டி அதன் மேல்உட்கார்ந்தார். அவருடைய ரூபம்மின்னலைப்போலவும், அவருடைய உடைவெண்பனியைப் போலவுமிருந்தது. காவற்காரர்களோ அவரைக் கண்ட பயங்கரத்தால் திடுக்கிட்டு செத்தவர்களைப்போலானர்கள் கல்லறை வெறுமையாக இருந்ததைக்கண்டு அவர்களுடைய திகில்இன்னும் அதிகரித்தது.

கல்லறையைத் தரிசிக்க வந்த சில பக்தியுள்ள ஸ்திரீகளை தேவதூதன் பார்த்துச் சொன்னதாவது: "நீங்கள் பயப்பட வேண்டாம். சிலுவையில் அறையுண்ட யேசுநாதரைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கேயில்லை. ஏனெனில் தாம் கூறியபடியே உயிர்த்தெழுந்தார். ஆண்டவர் வைக்கப்பட்டிருந்த இடத்தை வந்து பாருங்கள். பின்பு நீங்கள் தீவிரமாய்ப்போய் அவர் உயிர்த்தெழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள்" என்று கூறினர்- (மத்தேயு 28 அதி. 2—7 வசனங்கள்.)

கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டிருந்த யேசுநாதருடைய சடலத்தைக் காணவில்லை என்ற செய்தியைக் கேட்ட அவருடைய சீஷர்களில் இருவராகிய இராயப்பரும், அருளப்பரும் கல்லறைக்கு விரைந்து சென்று விடயத்தை நேராக ஆராய்ந்தனர். இராயப்பர் முதல் முதல் கல்லறைக்குள் புகுந்து யேசுநாதருடைய சடலத்தை மூடிக்கட்ட உபயோகித்த பரிவட்டச் சேலைகள் வைக்கப் பட்டிருக்கிறதையும் அவர் தலையின் மேல் போர்த்திருந்த உருமாலை பரிவட்டச் சேலைகளோடு வைத்திராமல் புறம்பாய்ச் சுருட்டி ஓர் மூலையில் வைத்திருப்பதையும் கண்டார். அருளப்பரும் கல்லறைக்குள் சென்று இவைகளை அவதானித்தார். அடக்கம் பண்ணப் பட்ட சரீரம் மறைந்த மர்மத்தைப் புரிந்து கொள்ளாமல் இருவரும் மற்றச் சீஷர்கள் யூத அதிகாரிகளுக்குப் பயந்து ஒதுங்கியிருந்த இடத்தை அடைந்தனர்- (அருளப்பர் 20-ம் அதி. 1—10 வசனங்கள்.)

மாலையில் மறைந்த சூரியன் மறுநாட் காலை தன் ஒளிக்கிரணங்களைப் பரப்பிக் கொண்டு கீழ்த்திசையில் உதிப்பது போல, பெரிய வெள்ளிக் கிழமை மரித்து அடக்கம் பண்ணப்பட்ட யேசுக் கிறிஸ்துநாதர் மூன்றும் நாளாகிய ஞாயிறு வாரம் அதிகாலையில் முத்திரையிடப்பட்ட கல்லறை திறபடாமல் இருக்கவே தமது சொந்த வலிமையினல் தமது சரீரத்தை மீண்டும் உயிர்ப்பித்து கல்லறையை விட்டு வெளிவந்தார். கார்மேகத்தைக் கிழித்தெழும் கதிரவனைப் போன்று மரணத்தை வென்ற கிறுஸ்துநாதர் மகிமைப் பிரதாபத்தோடு கல்லறையினின்று உத்தானமானர். அவருடைய உடல் உதயசூரியனைப்போல் பிரகாசித்தது; ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்கு மனோவேகமாய்ச் செல்லும் ஆற்றலும் சடப் பொருளினல் கட்டுப்படாமல் அவற்றை ஊடுருவிச் செல்வதற்கு வல்லபமும் அருடைய சரீரத்திற்கு இருந்தது.

தமது உத்தானத்தைக் குறித்து யேசுநாதர் தம்முடைய சிஷ்யர்களுக்குப் பல முறைகளில் முன் கூறியிருந்தும் அவர்கள் அதை விசுவசிக்கவில்லை. அவருடைய மரணத்தின்பின் யூத அதிகாரிகள் மட்டில் அவர்கள் கொண்டிருந்த அச்சத்தின் காரணமாய் அந்தரங்கமான ஓர் அறையில் பதுங்கியிருந்தார்கள். கதவுகள், யன்னல்கள் எல்லாம் உட்புறமாகத் தாழிடப்பட்டு இருந்தன. சடுதியாக அந்த அறையில் ஒரு உருவம் தோன்றியது. அது பேயோ, பூதமோ என்று அவர்கள் பயப்பட்டார்கள் அப்போது யேசுநாதர் அவர்களைத் தேற்றி "நீங்கள் கலங்குவானேன்? நான் தான் என்று அறியும்படி என் கரங்களையும் பாதங்களையும் பாருங்கள். என்னைத் தொட்டுப் பாருங்கள். ஏனெனில் தசையும் எலும்புகளும் எனக்கு இருக்கிறதாக நீங்கள் காண்பது போல ஒரு பூதத்திற்குக் கிடையாது" என்று சொல்லி அவர்களுக்குத் தம்முடைய கரங்களையும் பாதங்களையும் காட்டினர். இன்னும் அவர்கள் முன்னிலையிலே போசனமும் அருந்திக் காட்டினர்.

யேசுநாதர் தம்முடைய அப்போஸ்தலருக்குக் காட்சியளித்தபோது பன்னிரு அப்போஸ்தலருள் ஒருவராகிய தோமையார் சமுகமாயிருக்கவில்லை. அவர் திரும்பிவந்தவுடன் மற்ற அப்போஸ்தலர்கள் தாங்கள் கண்ட காட்சியைப் பற்றி அவருக்குத் தெரிவித்தனர். ஆனல் நான் அவருடைய கரங்களிலே ஆணிகள் அறைந்த இடங்களிலும் ஈட்டியால் குத்தித் திறக்கப்பட்ட அவருடைய விலாவிலும் என் கை விரல்களை இட்டால் ஒழிய நான் விசுவசிக்கமாட்டேன" என்று தோமையார் விடாப்பிடியாகக் கூறிவிட்டார்.

எட்டு நாட்களுக்குப்பின் யேசுநாதர் மீண்டும் அப்போஸ்தலர்களுக்குக் காட்சி கொடுத்தார். இவ்வேளை தோமையாரும் சமுகமாயிருந்தார் அவர் தோமையாரை அழைத்து "இங்கே உன்விரலையிடு; என கரங்களைப் பார்; உன்கையை நீட்டி என் விலாவிலேவை; அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு" என்று கூறினர். தோமையார் அவருக்கு மறுமொழியாக "என் ஆண்டவரே! என் தேவனே!" என்று தமது விசுவாசத்தை அறிக்கையிட்டு அவரை ஆராதித்தார்.

கல்லறையை விட்டு உயிர்த்தெழுந்த பின் யேசுநாதர் தம்முடைய அப்போஸ்தலருக்கு மட்டுமல்ல, வேறு அநேகருக்கும் தரிசனை கொடுத்துள்ளார். கிறிஸ்துநாதர் கல்லறையில் நின்றுஉயிர்த்தெழுந்தருளினர் என்ற சத்தியத்தின் மேல் தான் கத்தோலிக்க திருமறை கட்டப்பட்டுள்ளது. இந்த நற்செய்தியை உலகெங்கும் எடுத்தியம்புவதற்கே அப்போஸ்தலர்கள் அனுப்பப்பட்டனர். அவர்களும் அவர்களைப் பின் தொடர்ந்து வந்தவர்களும் கிறிஸ்து நாதருடைய உத்தானத்திற்கும் தெய்வீக மகிமைக்கும் மகத்தான சான்று பகர்ந்து தங்கள் உயிரைத்தானும் தியாகம் செய்தனர். இவர்கள் சிந்திய குருதி ஆயிரம், பல்லாயிரம் கிறிஸ்துவர்களைப் பிறப்பிக்கும் வித்தாக மாறியது.

இருளை அகற்றும் உதய சூரியனைப் போல் கல்லறையினின்று உத்தானமாகிய கிறிஸ்துநாதர் உலகத்தின் அஞ்ஞான இருளை அகற்றும் ஒளிவிளக்காக விளங்குகின்றார்.

## ஜயாறன்

எழுதுவது

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னர் முதலிய இடங்களில் நடந்த தமிழரசுக் கட்சிப் பொதுக்கூட்டச் செய்திகளை உடனுக்குடன் போட்டு விவரங்களை பொதுமக்களுக்குத் தெரிவித்ததற்காக 'ஈழநாடு' பத்திரிகையைப் ஓர் அன்பர் பாராட்டினர்.

இதுபற்றி மகிழ்ச்சியடைகையில், ஓர் வாலிபர் நேற்றுக் காலை அவசரமாக வந்தார். "மட்டக்களப்பு பொதுக் கூட்டத்திலே தாம் பேச மறுக்கவோ, வெளிநடப்பு செய்யவோ இல்லை என்று திருவாளர் ராசதுரை ஒரு பத்திரிகையில் மறுத்திருக்கிறரே, நீங்கள் எப்படி அவர் பேச மறுத்ததாக வெளியிட்டீர்கள்?" என்று கேட்டார். அந்த அன்பர் 'ஈழநாடு' பத்திரிகையைப் படிப்பதற்காக எனது நன்றி. அவரைப் போல் மற்றும் சிலருக்கு இதுபற்றிச் சந்தேகம் ஏற்பட்டிருக்கலாம். அவர்களுக்கு நிலைமையை விளக்க வேண்டியது எங்கள் கடமை.

* * *

மட்டக்களப்புக்கூட்டத்தைப் பற்றி இரவு சுமார் 8 மணிக்கு தகவல் கிடைத்தது. திரு. ராசதுரை பேசவில்லை என்று செய்தி கிடைத்ததும், வியப்புற்று தமிழரசுக் கட்சியின் பொறுப்பான தலைவரொருவருக்கு இங்கிருந்து டெலிபோன் செய்தோம். கூட்டத்தைப்பற்றியும் அங்கு நடந்ததைப்பற்றியும் அவர் விளக்கமாகச் சொன்னர். வெளிநடப்புச் செய்ததாக நாம் வெளியிடவில்லை.

பின்னர் திரு. ராசதுரைக்கே டெலிபோன் செய்தோம் துரதிருஷ்டவசமாக அவர் அங்கு இல்லை. அவர் இருந்திருந்தால் அவர் சொன்னதை அப்படியே கொடுத்திருப்போம். இதை விளக்கியதும் அந்த வாலிபரும் ஒருவித ஆறுதலுடன் திரும்பினர்.

* * *

ரஷ்ய மக்களுக்கு இலங்கைத் தேயிலை என்றால் உயிராம். இங்கு வந்துள்ள ரஷ்ய ஸ்தானிகர் காரியாலய முதல் காரியதரிசி நிகிறின் ஒரு ருசியான அனுபவத்தைச் சொன்னர். முன்னர் இலங்கை வந்துவிட்டு, அவரும் அவரது மனைவியாரும் ரஷ்யா திரும்பியதும், ஒரு பெட்டியில் இலங்கைத் தேயிலையையும், நண்பர்களுக்குப் பல்வேறு அன்பளிப்புகளையும் எடுத்துச் சென்றாராம். நண்பர்கள் மற்ற அன்பளிப்புகளை விரும்பாமல், "ஸிலோன் டீ" இருக்கிறதா? என்று கேட்டு, எல்லாத் தேயிலையையும் எடுத்துப்போய்விட்டதாயும் தமக்குக் கொஞ்சம் கூட வைக்கவில்லையென்றும் தெரிவித்தார்.

ரஷ்யாவில் ஜார்ஜியா என்னுமிடத்தில் தேயிலை பயிராகிறதாம். இந்தியாவிலிருந்தும் சீனத்திலிருந்தும் தேயிலை வருகிறதென்றும், ஆனல் ரஷ்ய மக்கள் "ஸிலோன் டீ"க்குத்தான் அதிக ஆசைப்படுவதாகவும் சொன்னர்.

அப்படியானல் ஏன் அதிகமாக இலங்கைத் தேயிலையை வாங்கிக் கொள்ளக்கூடாதென்று கேட்டதற்கு, பண்டமாற்று முறையிலேயே அதை வாங்க முடியுமென்றும், தேயிலைக்குப் பதில் ரஷ்யாவிடமிருந்து இலங்கை வேறு பொருளை வாங்க வேண்டி

(8-ம் பக்கம் பார்க்க)

உப்பு ★ புளி ★ வெல்லம்

# "பங்கீட்டு முறையில் நியாய விலைக்கு கிடைக்க வழி செய்க!"

## மாநகரசபை கோரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

உப்பு, புளி, வெல்லம் ஆகியவற்றிற்கு மிகுந்த தட்டுப்பாடும் கூடுதலான விலையுமாக இருப்பதால் இவைகளை அரிசி விநியோகம் செய்யும் பங்கீட்டு முயைப்படி நியாயமான விலைக்கு வழங்கக்கூடிய ஒழுங்குகளைச் செய்யுமாறு உணவு அமைச்சரையும் பிரதமரையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானமென்று யாழ்ப்பாண மாநகர சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இப்பிரேரணையைத் திரு. எஸ். இராசரத்தினம் கொண்டுவந்தார்.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் மேயர் திரு. எம். ஜேக்கப் தலைமையில் நடைபெற்றது.

கலைப்புலவர் திரு. நிக்கலஸின் பிரிவுக்கும் திரு.கே.நவரத்தினத்தின் பிரிவுக்கும் அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றபட்டதோடு 2 நிமிடநேர மௌனம் அனுட்டிக்கப்பட்டது.

**மீண்டும் வேலை**

மராமத்து இன்ஜினியர் காரியாலயத்தில் அலுவலகச் சிப்பந்தியாக வேலைபார்த்துவரும் பின்பு வேலைநீக்கம் செய்யப்பட்டவருமாகிய திரு. எஸ். பராராசசிங்கத்தை உடனடியாக வேலைக்கு அமர்த்தவேண்டுமென்று திரு. என். தேவபாலசுந்தரத்தினல் கொண்டு வரப்பட்ட பிரேரணை 7-6 வாக்குகளால் நிறைவேறியது.

வீதிக்கு விளக்கேற்றும் இம் மாநகரசபை ஊழியரான திரு நாகலிங்கம் சின்னையா கடந்த வருடம் ஏப்ரல் 25-ம் திகதி வீதியில் விளக்குகளை அணைத்துக் கொண்டிருக்கும்போது ராணுவசிப்பாய்களால் தாக்கப்பட்டதையிட்டு வருத்தம் தெரிவித்தும் ரூ 500 வைத்தியசிகிச்சை உதவிப் பணமாகக் கொடுக்கவேண்டும் என்றும் திரு. பி எஸ். சோமசுந்தரம் கொண்டுவந்த பிரேரணையும் நிறைவேற்றப்பட்டது.

# கணவர் அடித்தபின் மனைவி தற்கொலை

ஹேவஹெத்தை, வியாழன்

கணவரிடம் அடிவாங்கிய ஒரு மனைவி தனக்குத் தானே நெருப்புப் பற்றவைத்துக்கொண்டு உயிர் மாய்த்த சம்பவமொன்று இங்கு நிகழ்ந்துள்ளது.

டபிள்யு. ஏ. கருணசேன என்பவர் வீடு திரும்பியபோது அவரது மனைவியை வீட்டில் காணவில்லை. சிறிது நேரம் கழிந்து கருணசேனவின் மனைவி ருெசாரியோ வீடு திரும்பினர். குருநாகலுக்குத் தமது பெரிய தாயிடம் சென்றிருந்ததாக ருெசாரியோ கணவரிடம் கூறினர். கருணசேன தனது மனைவிக்குக் காதைப் பொத்தி நன்ருக அடித்தார். அடிவாங்கிய பின்னர் ருெசாரியோ தனது ஆடைகளுக்குத் தீ மூட்டிக்கொண்டிருந்தாராம். இதைக் கண்ட அவரது கணவர் தீயை அணைத்தார். கணவருக்குத் தேநீர் தயாரிக்கப்போவதாகச் சமையலறைக்குச் சென்ற ருெசாரியோ உள்ளே நின்று மண்ணெண்ணை ஊற்றிக் கொண்டு தமக்கு இரண்டாந் தடவையாகத் தீமூட்டிவிட்டார். திரும்பவும் தீயை அணைப்பது கருணசேனவுக்குக் கஷ்டமாகப் போய்விட்டது. ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ருெசாரியோ சில மணி நேரத்தில் மரணமானர்.

ருெசாரியோவின் மரணம் பற்றி விசாரணை நடத்தப்பட்டபோது கருணசேன இந்தத் தகவல்களை வெளியிட்டார். தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# கி. ச. தலைவரது காரின் தமிழ் 'ஸ்ரீ' தகடு

## ராணுவத்தினரால் அகற்றப்பட்டது

மாவிட்டபுரம், வியாழன்

மயிலிட்டி கிராம சபைத் தலைவர் திரு. எஸ். ஸ்ரீ பாஸ்கரன் தமது காரிலிருந்த தமிழ் ஸ்ரீ இலக்கத் தகட்டை இரு இராணுவ சிப்பாய்கள் பலாத்காரமாக அகற்றிவிட்டதாக காங்கேசன்துறை உதவி குப்ரிண்டனிடம் புகார் செய்துள்ளார்.

திரு. பாஸ்கரன் உதவி குப்ரிண்டனுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:-

சென்ற 13-ம் திகதி நான் எனது 1 ஸ்ரீ (தமிழ்) 1530 நம்பர் காரில் மயிலிட்டி கிராம சபைக் காரியாலயத்திலிருந்து எனது வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த சமயத்தில் அந்த வழியால் இராணுவ ஜீப் ஒன்றில் வந்த இராணுவத்தினர் திடீரென்று ஜீப்பை நிறுத்தி எனது காரை நிறுத்தும்படி உத்தரவிட்டார்கள். பின்னர் எனது காரிலிருந்த ஸ்ரீ நம்பர் தகட்டை இரு இராணுவ சிப்பாய்கள் பலாத்காரமாக அகற்றி எனது கார் சாரதியை தாக்கி சாரதியின் லைசன்சையும் எடுத்துச் சென்றுர்கள். அத்துடன் என்னையும் அவர்கள் புண்படும்படி பேசிச் சென்றுர்கள். இதனல் எனக்கு 10 ரூபா வரையான நஷ்டமேற்பட்டுள்ளது.

இது ஒரு பலாத்காரமான செயல் என்பதை தாங்கள் ஒத்துக்கொள்வீர்களென நம்புகின்றேன். இராணுவத்தினர் எல்லைமீறி நடந்துகொண்டுள்ளார்கள். எனவே தாங்கள் இது சம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

எனது கார் சாரதியிடமிருந்து எடுத்துச் சென்ற கார் லைசன்சை சுன்ஞகம் பொலிஸில் ஒப்படைத்துள்ள இராணுவ சிப்பாய் கொக்குவிலிலுள்ள இராணுவ முகாமில் இருப்பவர் என் சுன்ஞகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திரு. பாஸ்கரன் இக்கடிதத்தின் பிரதிகளை பிரதம மந்திரிக்கும் தமிழ் எம். பி.க்களுக்கும் இராணுவ கமாண்டருக்கும் அனுபயுள்ளார்.

# ஒரே தினத்தில் 7 பேருக்குகத்திக் குத்து

பையாகலை, வியாழன்

கத்திக்குத்து சம்பவங்கள் சர்வசாதாரணமாகி விட்டது. நேற்று முன்தினம் மொத்தமாக 7 பேருக்குக் கத்திக்குத்துக் காயங்கள் ஏற்பட்டன. இவர்களில் மூவர் நாகாட ஆஸ்பத்திரி வாட்டுகளில் அனுமதிக்கப் பட்டுள்ளார்கள். ஏனைய நால்வரும் வெளி நோயாளராகச் சிசிச்சை பெற்றனர்.

ஆஸ்பத்திரி வார்ட்டில் அனுமதிக்கப் பெற்றவர்களில் வெலிப்பனையைச்சேர்ந்த எச். ஏ. அபயபால (வயது 32) என்பவர் ஒரு இரண்டு சத பீடிக்காக இருவருடன் வாக்கு வாதப்பட்டு இவர் கத்திக்குத்துக்கு ஆளானுராம்.

கலன முல்லாவைச் சேர்ந்த எச். செனறிஸ் என்பவர் கத்திக்குத்துப் பெற்ற இரண்டாமவர். இவரது வீட்டு முற்றத்திலேயே இவருக்குக் கத்திக்குத்து கிடைத்ததாம். தனது சகோதரி வீட்டில் இரவுப் போசனம் அருந்த உட்கார்ந்த செனறிஸ் என்பவரை ஊர் பேர் தெரியாத இருவர் வீட்டு வாசலில் நின்று அழைத்தார்களாம். செனறிஸ் சென்றதும் கத்திகளால் அவரைக் குத்தினர்களாம்.

கத்திக்குத்து வாங்கிய மூன்ரும் பேர்வழி பஹலகொட என்னும் ஒரு இளைஞன்.

# "வீதியோரங்களில் நிழல் தரும் மரங்கள் நாட்டவேண்டும்"

## மாநகரசபை தீர்மானம்

யாழ்ப்பாணம், வியாழன்

"யாழ்ப்பாண வீதியோரங்களில் நிழல் தரும் விருட்சங்கள் இல்லாமலிருப்பதால் கோடைகால வெய்யிலால் தார் போட் தெருக்களிலிருந்து கிளம்பக்கூடிய சூட்டைத் தாங்கவியலாது பாதசாரிகள் பெரிதும் துன்பப்படுகிருர்கள் ஆகவே, பள்ளிச்சிருர், தொழிலாளர், அலுவலக ஊழியர், மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் நன்மையை முன்னிட்டு யாழ்ப்பாண நகரசபையின் அதிகார எல்லைக்குட்பட்டதெருவோரங்களில் நிழல் தரும் விருட்சங்களை நாட்ட உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்னும்தீர்மானம் கடந்த புதன்கிழமைநடைபெற்ற மாநகரசபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது. இந்த பிரேரணையைக் கொண்டுவந்து பேசிய திரு. என். டி. செல்லத்துரை புளி முதலிய உப உணவுப் பொருட்களுக்கு அதிக தட்டுப்பாடு வராமல் பாதுகாக்க புளி முதலியவற்றையும் நாட்டலாமெனத் தெரிவித்துக் கொண்டார்.

# தமிழர் - சிங்களவர் ஒற்றுமைக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு

## இ. போ. ச புது வருட விழாவில் தலைமையுரை

மட்டக்களப்பு, வியாழன்

"இப்பகுதிகளில் வாழும், தமிழ் - சிங்கள மக்களின் ஒற்றுமைக்கு நல்லதோர் எடுத்துக் காட்டாக, இக்களியாட்டுவிழா அமைந்துள்ளது. புதுவருட நற்தினத்தில் இன - மத வேற்றுமையின்றி இருபகுதி மக்களும் ஒன்ருகச் சேர்ந்து இக்களியாட்டுவிழாவில் ஈடுபட்டிருப்பது மகிழ்க்சிக்குரியதொரு காட்சியாகும்."

இவ்வாறு இ. போ. ச. மட்டக்களப்பு டிப்போ, பொதுநல - களியாட்டச் சங்கத்தின் ஆதரவில் தமிழ் - சிங்கள புதுவருடத்தையிட்டு நடைபெற்ற களியாட்டவிழாவில், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மட்டக்களப்பு நகரசபைத் தலைவர் திரு. ஜே. எல். திசவீரசிங்கம் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

இ. போ. ச. அலுவலக மைதானத்தில் நடைபெற்ற இக்களியாட்டவிழாவில், இ. போ. ச. ஊழியர்களின் குழந்தைகள் மற்றும் பெண்கள், எல்லோருமே கலந்துகொள்ளத்தக்க பல்பேறு விளையாட்டுப்போட்டிகள் ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

இசை நிகழ்ச்சிகள், பைலா நடனப்போட்டி, கிராமிய நடனம், அழகுராணித் தெரிவுப் போட்டி, விநேத உடைப் போட்டி ஆகியன விழாவில் இடம் பெற்றன.

சகல போட்டிகளிலும் வெற்றியீட்டியவர்களுக்கு நகர சபைத் தலைவர் திரு. ஜே. எல். திசவீரசிங்கத்தினல் பரிசுகள் வழங்கப்பட்டன. இ. போ. ச. மாவட்ட அதிபர் திரு. ஆர். திருநாவுக்கரசு, திரு. கைபீற்றர் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

# 324 தேர்தல் ஆட்சேபனை மனுக்கள்

புதுடில்லி, ஏப். 18

சமீபத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தல் சம்பந்தமாக இதுவரை 324 தேர்தல் ஆட்சேபனை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் 40 ஆட்சேபனை மனுக்கள் லோகசபைத் தேர்தல் முடிவுகள் சம்பந்தமாகவும் மற்றவை சட்டசபைத் தேர்தல் முடிவுகள் சம்பந்தமானவையுமாகும்.

# பொருளாதார வளர்ச்சியில் கிராமங்களின் பங்கு

## செனட்டர் மாணிக்கம் பேச்சு

மட்டக்களப்பு, வியாழன்

"கிராம மக்கள் சிக்கனமாக வாழப் பழகிக்கொள்வதோடு தமது வருவாயைப் பெருக்க முயற்சி எடுக்க வேண்டும். நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கிராம மக்களுக்குத்தான் பெரும் பங்குண்டு என்பதை நீங்கள் மனதில் பதித்து அதற்கேற்றவாறு செயலாற்ற வேண்டும்."

திரு. முத்தையா மாணிக்கம் செனட்டராக நியமிக்கப்பட்டதைக் கௌரவிக்கும் முகமாக புதுநகர் சன சமூக நிலையமும், ஆனந்தா விளையாட்டுக்கழகமும் கூட்டாக நடத்திய பாராட்டுக் கூட்டத்தில், தமக்களிக்கப்பட்ட பாராட்டிற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், செனட்டர் மாணிக்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. மாணிக்கம் தொடர்ந்து பேசியதாவது:-

இன்றைய இளைஞர்கள் அரசாங்க உத்தியோகத்தை மட்டும் நம்பியிருக்கக்கூடாது. குறிப்பாக தமிழர்களைப் பொறுத்த அளவில் அவர்களுக்கு அரசாங்க உத்தியோகம் கிடைப்பது பெரிதும் கஷ்டமாகவே இருக்கும். ஆகவே, இயன்றவரை முயற்சி செய்து நம்கிராமங்களிலேயே நாம் சிறு சிறு விவசாயப் பண்ணைகளை அமைத்து, சிறு குடிசைத் தொழில்களில் ஈடுபட வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம், நமக்கு நல்ல வருவாயைத் தேடிக் கொள்வதோடு, நம்மையறியாமலேயே நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் உதவி செய்பவர்களாவோம்.

செனட்டர் மாணிக்கத்துக்கு கழகத்தின் ஆதரவில் வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டபின், தேநீர் விருந்தும் இடம் பெற்றது.

# ஆரம்ப விழாச் செலவு ரூ. 825!

கொழும்பு, புதன்

கனதுல்லை திட்டத்தை விவசாய மந்திரி ஆரம்பித்து வைத்த தினத்தன்று திறப்பு விழாக் கொண்டாட்டத்துக்கென ரூ. 825 செலவு செய்யப்பட்டது.

சிற்றுண்டிகளுக்கும், சிகரட்டுகளுக்கும், மாலைகளுக்கும் நடனக்கச்சேரிகளுக்கும் வாடகைக்கு கார் பிடித்த விதத்திலுமே இச் செலவு ஏற்பட்டதாக நீர்ப்பாசன இலாகா டரக்டர் தெரிவித்திருந்தார் தஇந்த செலவுகள் சம்பந்ஓமாக விபரமான பட்டியல் டன்றை நிதிக் கட்டுப்பாட்சதிகாரி மூலம் தம்மிடம் திமர்ப்பிக்குமாறு ஆடிட்டர் ஜெனரல், விவசாய காணி நில நீர்ப்பாசன அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியைக் கேட்டுள்ளார்.

இந்த செலவுக்கென ஒதுக்கப்பட்ட தொகையில் இந்தச் செலவுகள் செய்யப்பட வில்லை எனத்தெரிகிறது என ஆடிட்டர் ஜெனரல் நிரந்தரக் காரியதரிசியிடம் தெரிவித்துள்ளார்.

# ஷோம்பே தடுத்து நிறுத்தப்பட்டார்

லியப்போல்ட்வில்லி, ஏப். 19

கடாங்கா பிரிவினையை முடிவுக்குக் கொண்டுவருவது சம்பந்தமாக காங்கோ மத்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி முடித்துவிட்டு கடாங்கா தலைநகரான எலிஸபெத்வில்லிக்குப் புறப்பட்ட திரு. ஷோம்பேயை காங்கோ ராணுவத்தினர் தடுத்துநிறுத்திவிட்டனர்.

லியப்போல்ட்வில்லி விமான நிலையத்தில் ஐ. நா. விமானமொன்றில் ஏறிய ஷோம்பே அங்கிருந்து விமானத்தில் செல்லமுடியாதவாறு தீயணைப்புப் படை வாகனங்களை விமான ஓடுபாதையின் குறுக்கில் காங்கோ ராணுவத்தினர் நிறுத்திவைத்தனர். இச்செய்கையைப் பார்த்த ஐ. நா. படையினர் விமானத்தைச் சூழ்ந்து கொண்டு ஷோம்பேக்குப் பாதுகாப்பளித்தனர். ஷோம்பே இப்பொழுது ஐ. நா. காரியாலயத்தில் பாதுகாப்பிலிருக்கிருர்.

# மே மாதம் கொழும்பில்இசைவிழா

கொழும்பு, வியாழன்

இலங்கை சங்கீத நாட்டிய சங்கம், சைவ மங்கையர் கழகம் ஆகியவற்றின் ஆதரவின் பெயரில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மே மாதம் 4-ம் 5-ம் 6-ம் திகதிகளில் இசை விழா நடைபெறவிருப்பதாகத் தெரிகிறது. இன்னிசைக் கச்சேரிகளும் இடம் பெறவிருக்கும் இவ்விழாவில் இலங்கையிலுள்ள பலரும் கலந்து கொள்வர். கடந்த 4 வருடங்களாக இந்த இசை விழா நடாத்தப்பட்டு வருகிறது. பிரபல தென்னிந்திய பாடகர்களும் விழாவில் கலந்து கொள்வதற்கு இவ்வருடம் அழைக்கப்பட்டிடிப்பதாகத் எனத்தெரிகிறது

# " இசையும் தமிழும் தமிழரும் பிரிக்க முடியாதவை "

## ரசிக ரஞ்சனசபா இசை விழாவில் பொன். முத்துக்குமாரன் தலைமையுரை

யாழ்ப்பாணம் வியாழன்

"இசையும் தமிழும் தமிழரும் பிரிக்க முடியாதவைகள்" என்று, வித்துவான் பொன் முத்துக்குமாரன் நேற்று மாலை ஆரம்பமான யாழ்ப்பாணம் ரசிகரஞ்சன சபாவின் இசை விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் முன்றிலில் அமைக்கப்பட்டுள்ள அலங்காரப் பந்தலில் இசைவிழா நேற்று ஆரம்பமானது. இந்த விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்த திரு. பொன். முத்துக்குமாரன் மேலும் கூறியதாவது:-

பண்டைக்காலத்தில் மன்னர்கள் இசைக்கும் இசைக் கலைஞர்களுக்குமாக தங்கள் நாட்டையும் தங்களையுமே தானமாகக் கொடுத்திருக்கிறார்கள். தமிழ் மக்கள் இசையை வெறும் இன்பச் சாதனமாகக் கொள்ளாமல் இம்மை இன்பத்துக்கும் இறைவனை அடைதற்குமே சாதனமாகக் கொண்டார்கள் மேலும் இசையை இறைவனாகவே கண்டார்கள். நாயன்மார்களும் ஆழ்வார்களும் தமிழோடு இசை பாடி பக்தியை வளர்த்தார்கள். முக்திக்கு வழிகாட்டியும் வாழ்ந்தனர். இசைக்கலை பிற்காலத்தில் அன்னியருடைய பிரசாரத்தினால் இகழ்ந்து ஒதுக்கப்பட்டது. அவ்வாறே இசைக்கலைஞர்களும் சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டனர். இன்று பண்டைய காலத்தில் போல இசைக்கும் இசைக் கலைஞர்களுக்கும் மதிப்பும் நல்வாழ்வும் நாளுக்குநாள் வளர்ந்து வருகிறது. நாம் இசையோடு இசைந்து வாழும் பொழுது தான் தமிழர்களாக முடியும்.

இதற்கு முன் திரு. பொன் முத்துக்குமாரனை தலைமையுரை நிகழ்த்துமாது ரசிக ரஞ்சன சபாத்தலைவர் திரு.து. சீனிவாசகம் கேட்டுக்கொண்டு திரு. பொன்முத்துக்குமாரனை சபையினருக்கு அறிமுகம் செய்துவைத்தார்.

## பாஸ்கட்பந்தாட்டப் போட்டி முடிவுகள்

மட்டக்களப்பு, புதன்

மட்டக்களப்பு — யாழ்ப்பாணம்—திருக்கோணமலை— கொழும்பு ஆகிய நான்கு நகரங்களுக்கிடையேயான பாஸ்கட் பந்தாட்டப் போட்டிகள் மட்டக்களப்பு அர்ச் மைக்கல் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இரண்டு தினங்களாக மின்சார வெளிச்சத்தில் நடைபெற்ற சுவாரஸ்யமான இப்போட்டிகளைப் பெருந்திரளானோர் கண்டுகளித்தனர். போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான விருதுகள் திரு. பி. சி. ருகல் அவர்களால் வழங்கப்பட்டன.

### சம்பியன்கள்

திருக்கோணமலை—மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்கிடையே நடைபெற்ற மாவட்ட சம்பியன்களுக்கான போட்டியில் மட்டக்களப்புக் கோஷ்டி வெற்றியீட்டியது. மட்டக்களப்புக் கோஷ்டிக்கு 39 புள்ளிகளும், திருமலைக் கோஷ்டிக்கு 27 புள்ளிகளும் கிடைத்தன.

### பாடசாலை சம்பியன்கள்

பாடசாலை சம்பியன்களுக்கான போட்டியில் சிரேஷ்ட பிரிவுச் சம்பியன்களாக மட்டக்களப்பு சென்மைக்கல் கோஷ்டியும் திருமலை சென் ஜோசப் கோஷ்டியும் வெற்றி பெற்றன. கனிஷ்ட பிரிவுச் சம்பியன்களாக திருக்கோணமலை சென்ஜோசப் கோஷ்டி வெற்றி பெற்றது. கழகங்களுக்கான போட்டியில் திருக்கோணமலை ஜோசப்பியன் சம்பியனாகத் திகழ்ந்தது.

### புள்ளிகள்

சென் ஜோன்ஸ் கோஷ்டி சென்ஜோசப் கோஷ்டியை 55—52 புள்ளிகளாலும், சென் ஜோசப் கோஷ்டி, சென் மைக்கல் கோஷ்டியை 46—45 புள்ளிகளாலும், சென்மைக்கல் கோஷ்டி, சென்ஜோன்ஸ் கோஷ்டியை 84—39 புள்ளிகளாலும், ஜோசப்பியன்ஸ் கோஷ்டி இராணுவக் கோஷ்டியை 33—26 புள்ளிகளாலும் திருமலை ஜோசப்பியன்ஸ், மட்டக்களப்பு மைக்கல்மென் கோஷ்டியை 67—38 புள்ளிகளாலும் வெற்றியீட்டினர்.

# வைகாசி அனுடத்தில் வள்ளுவர் திருநாள்

## கொண்டாடுமாறு தமிழ்மறைக் கழகத் தலைவர் வேண்டுகோள்

கொழும்பு, வியாழன்

மே மாதம் 20-ந் தேதியன்று திருவள்ளுவர் திருநாளை உலகமெங்கும் கொண்டாடும் படி கேட்டுத் தமிழ் மறைக் கழகத் தலைவர் திரு. கா. பொ. இரத்தினம் பின்வரும்அறிக்கையினை வெளியிட்டிருக்கிறார்.

"உலகத்தின் பலபகுதிகளிலே தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களை ஒன்று படுத்தவும், தமிழின உணர்ச்சியை ஊட்டவுமே எமது தமிழ் மறைக்கழகம் வைகாசித் திங்களில் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடுமாறு சென்ற பத்தாண்டுகளாக வற்புறுத்தி வருகிறது. எமது வேண்டுகோளின் உயர்ந்த நோக்கத்தையும், பெருநன்மையும் உணர்ந்து உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் சாதிமத வேறுபாடுகளின்றியும் கட்சி வேறுபாடுகளின்றியும் திருவள்ளுவரைக் கொண்டாடி வருகின்றனர். திருவள்ளுவர் திருநாள் தமிழினத்துக்குப் பொதுவான திருநாளாகத் தமிழர் ஒவ்வொருவருடைய வீட்டிலுங் கொண்டாடப்படல்வேண்டும் என்பதே எமது கழகத்தின் ஆவலாகும். பல காரணங்களாற் பிளவு பட்டுக்கிடக்கும் எமது தமிழினத்தை ஒன்று படுத்தி ஒரு முகமாகத் தொழிற்படச் செய்யும் ஆற்றல் இத் திருவள்ளுவர் திருநாளுக்கே உரியது. எனவே ஆண்டில் ஒரு நாளைக் கேனும் எம்முடைய வேறுபாடுகளை மறந்து, இன உணர்ச்சியாற் பிணைப்புண்டு, திருவள்ளுவரைப் போற்ற முதலில் நாம் எல்லோரும் முற்படுதல் இன்றியமையாதது.

இவ்வாண்டுத் திருவள்ளுவர் திருநாள் மே மாதம் 20-ம் நாளாகிய ஞாயிற்றுக் கிழமையாகும் இந்த நாளன்று ஒவ்வொரூரிலும் திருவள்ளுவருக்கு விழாநடத்துமாறும் ஒவ்வொரு வீட்டிலும் திருவள்ளுவரைக் கொண்டாடுமாறும் கேட்டுக் கொள்கிறோம்''

# இளம் சைவப் புலவர் வகுப்பு ஆரம்பம்

தெல்லிப்பழை, புதன்

"அரசினர் சமயக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்துள்ள இந்நாளில் மாணவர்கள் அனைவரும் சமயக் கல்வி பெறுதல் அவசியமாகும். பரீட்சை மாணவனுடைய கல்வியை வளர்ப்பதற்குக் கருவியாகவுள்ளது"

இவ்வாறு அகில இலங்கைச் சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கத்தலைவர் வித்துவான் திரு. வ. செல்லையா இன்று இளஞ்சைவப்புலவர் வகுப்பினைத் தொடக்கி வைத்துப் பேசுகையிற் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையிற் கூறியதாவது:

சைவத்தையும், தமிழையும் நன்கு பரப்பவேண்டுமென்று தம் வாழ்வை நாவலர் அர்ப்பணித்தார். இதற்காகவே அவர் பிரம்மச்சரிய விரதத்தை அனுட்டித்தார். தமிழும், சைவமும வளர பாடசாலைகளை நிறுவினர். சமயப்பிரசங்கங்கள் செய்தார். அவர் வழி நின்று அவருடைய எண்ணங்களை பூர்த்தி செய்ய எவரும் முன்வராததையிட்டுக் கவலைப்படவேண்டியுள்ளது.

பிறமதத்தவர்கள் தம் மதத்தவர்களுக்கு பெரும் பொருள் செலவில போதனா பீடங்களை அமைத்துள்ளார்கள். அத்தோடு அவர்கள் பட்டங்கள் வழங்கியும் கௌரவித்து, உத்தியோகமும் வழங்குகிறார்கள். நம் சமயத்தவர்கள் தாங்கள் உண்டு தங்கள் வாழ்வு உண்டு என்று இருந்து விடுகிறார்கள். முயன்றோருக்கும் ஊக்கமளிக்கும் பண்பும் சிறிதளவாயினும் இல்லை."

சைவப் புலவர் பட்டதாரிகள் சங்கக்காரியதரிசி திரு. ச. சச்சிதானந்தம் பேசுகையில் குறிப்பிட்டதாவது: பல்வேறு துறைகளிலும் பாண்டித்தியம் பெறுவதற்கு போதனா வகுப்புகள் இருந்தும் சைவ சமயத் துறையில் முன்னேறிப் பட்டம் பெற வாய்ப்பில்லாத குறையை இச்சங்கம் இந்த வகுப்பினை ஆரம்பித்ததின் மூலம் போக்கியுள்ளது.

பண்டித வித்துவான் இ. திருநாவுக்கரசு பேசும் போது அரசினர் சமயக்கல்விக்கு அளித்துள்ள முக்கியத்துவம் காரணமாகச் சிலர் சமயத்தின் போர்வையில் சமயத்தைப் படுகுழியில் தள்ள முனைகின்றார்களென்றார்.

திரு. செல்லத்துரை 'இளஞ் சைவப்புலவர் வகுப்புப்பாடபோதனையை நடத்தினார்.

நாவலர் வித்தியாசாலையில் இளஞ் சைவப் புலவர் வகுப்பு தொடர்ந்து நடைபெறுமெனவும், மாணவர்கள் வகுப்புக்கு அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## திருக்குறள் போட்டி

தெல்லிப்பழை, புதன்

வர்த்தலைவிளான் வாலிபர் சங்கம் நடாத்திய திருக்குறள் போட்டியிலும் பேச்சுப்போட்டியிலும் நாவலர் இல்லமாணவர்களே ஆகக் கூடுதலான பரிசுகளைப் பெற்றனர். போட்டி முடிவுகள் வருமாறு:

### பேச்சுப் போட்டி

பாலர் பிரிவு: க. நித்திய தேவி, ஆ. தவமணி, சி. சரோஜினிதேவி.

கீழ்ப்பிரிவு: ச. விக்னேஸ்வரி, த. தவராசா, சோ. லலிதா.

மத்தியபிரிவு: க. விக்னராசா, த. மகாசிவம்.

மேற்பிரிவு: சோ. மனோகரன், சி. சிவானந்தம்.

### திருக்குறள் போட்டி

பாலர்பிரிவு: ஆ. தவமணி, தி. தியாகேஸ்வரன், க. நித்தியதேவி.

கீழ்ப்பிரிவு: ச. விக்னேஸ்வரி சோ. லலிதா, க. குகானந்தராசா.

மத்தியபிரிவு: சோ. இராகவன், த. தர்மச்சந்திரன், இ. கமலகாந்தன்.

மேற்பிரிவு: சி. சிவானந்தம், சோ. மனோகரன்.

## ஆசிரியர்களுக்கு பிரிவுபசாரம்

பருத்தித்துறை, வியாழன்

புலோலி மெதடிஸ்த பாடசாலை உதவி ஆசிரியர்கள் திருவாளர்கள் கே. பாலச்சந்திரன், கே. பாலசிங்கம் ஆகியோர் முறையே மாற்றலாகியும், ஆசிரிய கலாசாலைப் பயிற்சிக்கும் செல்வதை முன்னிட்டு இப்பாடசாலை ஆசிரியர்கள் பிரிவுபசார விருந்தொன்றை அளித்தனர்.

# துறைமுகத் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம்

## கமிட்டி கருத்து

கொழும்பு, வியாழன்

துறைமுகத் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் வழங்கவேண்டுமென தேசிய தொழிலமைப்பு மந்திரி திரு. எம். பி. டி. சந். சிறிவர்த்தனவினால் நியமிக்கப்பட்ட கமிட்டி கருத்து தெரிவித்துள்ளது.

துறைமுகத் தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு (சகலதும் உட்பட) பெறும் சம்பளத்தை இருபத்தி ஆறால் பெருக்கி வரும் தொகையை மாதச் சம்பளமாக அவர்களுக்கு கொடுக்கவேண்டுமென கமிட்டி தெரிவித்துள்ளது.

இவ்வித திட்டம் அமுல் நடத்தப்பட்டால் துறைமுகக் கார்ப்பரேஷனுக்கு வருடமொன்றுக்கு ரூ. 360,000 மேலதிகமான செலவு ஏற்படும்.

## நேபாள மன்னருக்கு டில்லி வரவேற்பு

புதுடில்லி, ஏப்ரல் 18

நேபாள மன்னர் மகேந்திரா இன்று பிற்பகல் புதுடில்லி வந்தபோது அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. ராணிரத்னா ராஜ்யலக்ஷ்மியும், இளவரசி சாரதாவும் அவருடன் வந்தனர்.

ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திர பிரஸாத், உப ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் ஆகியோரும், மந்திரிகளும் மன்னரை வரவேற்றனர். 21 பீரங்கிக் குண்டுகள் அப்போது முழங்கின.

உடல்நலக் குறைவினால் பிரதமர் நேரு விமான நிலையத்துக்கு வரவில்லை. இன்று மாலை மன்னரை திரு. நேரு சந்தித்தார்.

# 1 லட்சம் தோட்டத் தொழிலாளர்களுக்கு சுகாதாரப் பயிற்சி

கொழும்பு, வியாழன்

இலங்கையிலுள்ள ஒரு லட்சத்துக்கு அதிகமான தோட்டத் தொழிலாளர்களுக்கு சுகாதாரப் பயிற்சி அளிக்க சுகாதார இலாகா திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தோட்டப் பகுதிகளில் அதிகமாகப் பரவும் நோய்களை எப்படிப் பரவாது தடுப்பது என்பது பற்றியும் இந்நோய்களைத் தீர்க்க எவ்வித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுபற்றியும் தோட்டத் தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

தோட்டப் பகுதிகளிலிருக்கும் சுகாதார வசதிகளை தொழிலாளர்கள் தகுந்தபடி பேணி நடப்பதில்லை என்றும் சுகாதார விஷயத்தில் இவர்களிடையே நிலவிவரும் அறியாமையும் இதற்கொரு காரணம் எனவும் சுகாதாரப்பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

## தகவல் இலாகா இடமாற்றம்

கொழும்பு, வியாழன்

தற்போது செனட்கட்டிடத்திலுள்ள அரசாங்க தகவல் இலாகா நாளை வெள்ளிக்கிழமை ஹேமாஸ் கட்டிடத்துக்கு இடமாற்றம் செய்யப்படும். ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள குடியேற்ற வெளியேற்ற இலாகா இலங்கை கடற்படை கட்டிடத்துக்கு ஏற்கனவே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.


மிகத் திறமையான

**ப வ ர் ஸ்**

**உரங்கள்**

கிருமி நாஸ்தினி தெளிக்கும் யந்திரங்களும்

லாபகரமாய் பயிரிட

- புகையிலை
- வெண்காயம்
- மிளகாய்
- மரக்கறி
- நெல்
- வாழை

மற்றும் பழவகைகளும்

கிடைக்குமிடம்

**ஏ. ப வ ர்**

அன் கொம்பனி லிமிட்டெட்,

த. பெ. 11, கொழும்பு.

# சனசமூக நிலைய வருடாந்த விளையாட்டுப் போட்டி

## பரிசு பெற்றோர் விபரம்

நீர்வேலி, வியாழன்
நீர்வேலி காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்தின் மூன்று வது வருடாந்த விளையாட்டுப் போட்டி காமாட்சியம்பாள் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

காந்தி இல்லம் 124 புள்ளிகளையும், பாரதி இல்லத்தினர் 112புள்ளிகளையும் பெற்றன.

அழகாக அலங்கரிக்கப் பெற்ற இல்லத்துக்கான பரிசு காந்தி இல்லத்துக்கு அளிக்கப் பெற்றது.

ஒரு மைல் ஓட்டப் போட்டியில் பாரதி இல்லத்தைச் சேர்ந்த செல்வன் செ. சுப்பிரமணியம் முதலாம் இடத்தைப்பெற்றார்.

சாம்பியன்களாக மேற்பிரிவில் செல்வன் க. கோபால சிங்கமும், மத்தியபிரிவில் செல்வன் நா. சின்னத்தம்பி,செல்வி ச. அன்னலட்சுமிஆகியோரும், கீழ்ப்பிரிவில் செல்வன் சி. சிவகுருநாதன், செல்வி பேபி சரோஜா, செல்வி. ச.அருந்தவமணி ஆகியோரும் வெற்றியீட்டினர்.

இப் போட்டிக்கு முக்கிய ஆரம்பிப்பாளர்களாக உடற் பயிற்சி ஆசிரியர் திரு.த.ஆனந்தவேலு கடமையாற்றினர்.

திரு க. வல்லிபுரம் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்கினர்.

# கலைவிழாப் போட்டி முடிவுகள்

மட்டக்களப்பு, வியாழன்
மட்டக்களப்பு தெற்கு வட்டாரப் பாடசாலைகளின் ஆதரவில் இரண்டு தினங்களாக ஆரயம்பதிமாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற கலைவிழாப் போட்டிமுடிவுகள் வருமாறு:

அபிநயப்பாட்டு: 1. மெதடிஸ்தமிஷன் பாடசாலை புதுக்குடியிருப்பு. 2. இ. கி. மி. பெண்கள் பாடசாலை கல்லடி உப்போடை. 3. அ. த. க பாடசாலை நாவற்குடா.

கர்நாடகசங்கீதம்: 1. மத்திய மகாவித்தியாலயம் காத்தான் குடி. 2. இ. கி. மி. பெண்கள் பாடசாலை கல்லடிஉப்போடை 3. மகாவித்தியாலயம் ஆரப்பத்தை.

நாடகம்: 1. சிவானந்த வித்தியாலயம் கல்லடிஉப்போடை 2. மகாவித்தியாலயம் காத்தான்குடி, 3. இ. கி. மி. பாடசாலை ஆரப்பத்தை.

நாட்டுக்கூத்து: 1. அ. த. க பாடசாலை தாழங்குடா, 2. அ த. க. பாடசாலை நாவலடி, 3 (இருபாடசாலைகள்) 1. அ. த. க. பாடசாலை நாவற்குடா 2. மெ. மி. பாடசாலை ஆரம்பத்தை.

கிராமியப்பாடல்: 1. ரோ. க. பாடசாலை நடுவோடை, 2. அ. த. க. பாடசாலை 6-ம் குறிச்சி காத்தான்குடி, 3. அ. மு. க. பாடசாலை ஒல்லிக்குளம்.

கிராமியநடனம்: 1. ரோ. க பாடசாலை தாழங்குடா, 2. அ த. க. பாடசாலை கிரான்குளம், 3. மெ. மி. பாடசாலை கிரான்குளம்.

இசைநடனம்: 1. ரோ. க. மி பாடசாலை புதுமுகத்துவாரம். 2. மகாவித்தியாலயம் ஆரப்பத்தை, 3. இ. கி. மி. பெண் பாடசாலை, கல்லடி உப்போடை.

சான்றிதழ்: கலைவிழாவின் முதல்நாள் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட பாடசாலைகளுக்கு, மாவட்ட நீதிபதியின் பாரியார் திருமதி தம்பித்துரையும் இரண்டாம்நாள் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட பாடசாலைகளுக்கு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் பாரியார் திருமதி ஜோசப்பும் சான்றிதழ்கள் வழங்கினர்.

# ஆசிரியர் வேலை

## 500 பட்டதாரிகள் காத்திருக்கின்றனர்

கொழும்பு, புதன்
பட்டதாரி மாணவர்கள் உட்பட 500 பட்டதாரிகள் ஆசிரிய நியமனம் கோரி கல்வி இலாகாவுக்கு விண்ணப்பஞ் செய்து காத்திருக்கின்றனர். நிதியில்லாத காரணத்தால் எவருக்கும் கல்வி இலாகா புதிய நியமனம் வழங்கமுடியாதிருக்கின்றது.

புதிய ஆசிரிய நியமனத்துக்குப் பணம் பெற்றுக்கொள்ளுமுகமாக உவமான்ய பிரேரணை ஒன்றைக் கல்வி மந்திரி சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# வானொலிநிகழ்ச்சிகள்

## கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

வெள்ளி 20-4-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரைஇசை, 7-45 யோகராணி சின்னதேவி- பக்திப்பாடல்கள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 4-30 கிறிஸ்தவ விசேஷ நிகழ்ச்சி, 5-00 பிறந்த தினவாழ்த்துக்கள்,5-15 நாகஸ்வரம், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 இஸ்ரேல் தேசியதின விசேஷ நிகழ்ச்சி.

இரவு 7-00 ஞானஞ்சலி, 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 விமர்சனங்கள், 10-15 தேர்ந்த இசை.

## திருச்சி

(செய்திகள்: காலை 7-15 பகல் 2-00,இரவு7-15.)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 இ. என். பி. வேங்கடேசன் - நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர்நிகழ்ச்சி, 1-30 வாத்தியஇசை, 1-50 குரல்இசை, 2-10 டி. சரோஜா - பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி(கர்நாடகசங்கீதம்), 5-45 காந்தி கதை, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 ராதா ஜயலட்சுமி - பாட்டு, 9-15 பலகணி.

# ஒருவர் மரணம்

## ஐவர் றிமாண்டில் வைக்கப்பட்டனர்

பையாகலை, புதன்
குறுலுப்பிட்டி என்ற இடத்தைச் சேர்ந்த 26 வயதுள்ள பி. சொலமான் சிங்கோ என்பவரின் மரணம்குறித்து இரு பெண்கள் உட்பட ஐவரை றிமாண்டில் வைக்கும்படி களுத்துறை மாஜிஸ்திரேட் திரு. ஈ. ஓ. எவ். டி. சில்வா உத்தரவிட்டுள்ளார்.

# கல்லூரி அதிபர்கள் மகாநாடு

மட்டக்களப்பு, வியாழன்
மட்டக்களப்பு நகரசபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளின் கல்லூரி அதிபர்கள் மகாநாடொன்று கோட்டமுனை மாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

கிழக்குமாகாண உதவி வித்தியாதிபதி திரு.அங்லோ இராஜகாரியார் தலைமையில் நடைபெற்ற இம்மாகாநாட்டிற்கு, மட்டக்களப்பு எம். பி. இராஜதுரை, நகரசபைத்தலைவர் திரு ஜே. எல். திசவீரசிங்கம் ஆகியோர் உட்பட மட்டக்களப்பு நகரசபை எல்லைக்குட்பட்ட கல்லூரி அதிபர்களும் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு நகர எல்லைக்குட்பட்டபாடசாலைகளை தேசிய கல்வித்திட்ட அடிப்படையில் தரம்பிரிப்பது பற்றி கூட்டத்தில் ஆராயப்பட்டது. மிக விரைவில் இதுபோன்று இன்னுமோர் மகாநாட்டைக் கூட்டி பாமுசாலைகளைத் தரம்பிரிப்பது சம்பந்தமாக இறுதிமுடிவுகளை மேற் சொன்வதென்று கூட்டத்தில்முடிவு செய்யப்பட்டது


ஈழநாட்டினர் ஆசையோடு அருந்தும் மால்டெட் பால்

ஆச்சரியப்படவும் வேண்டுமா! நெஸ்டோமோல்டில் [illegible] யிருப்பதால் அனைவரும் அருந்த ஆசைப்படுகிறார்கள்! [illegible] நீங்கள் ஒரு நெஸ்டோமோல்ட் பிரியராக இருக்க வேண்டும் [illegible] மாக எல்லோரும் அப்படியே); அப்படியில்லாதபட்சத்தில், [illegible] இதன் இனிய சுவையை பருகி அறியுங்கள்—மகிழ்ச்சியடை[illegible] தவிர மனம் வருந்தமாட்டீர்கள்! சூடாகவோ அல்லது ஐஸ்—[illegible] மையாகவோ அருந்தக்கூடிய நெஸ்டோமோல்ட், நாள் முழுக்க உற்சாகத்துடன் திகழச் செய்யும் வெறும் புத்துணர்ச்சியூட்டும் பானமோ அன்றியும் சுவை நிரம்பிய தாக சாந்தியோ அல்ல [illegible] டின்னை உற்றுப் பார்த்தால் உண்மை விளங்கும்—நெஸ்டோமோல்ட் உங்களுக்கு எத்தனை அளவு நன்மை புரிகின்றதென்பது புலப்படும்! இழந்த வலிமையை மீட்கவும், கட்டுமஸ்தான தேகத்தோடு மிளிர [illegible] உறுதுணை புரியும் ஊட்டச் சத்துக்களும், ஆரோக்கியமூட்டும் பொருட்களும் இதில் செழுமையாக அடங்கியுள்ளன. அளப்பரிய நன்மை யும், சுவையும் ஒருங்கே அளிக்கின்றது என்றளவில் நெஸ்டோ மோல்ட் நிகரற்று விளங்குகின்றது!




நான்விரும்புவது நெஸ்டோமோல்ட் அதெனக்கு நன்மையை அளிக்கிறது!

# சோவியத் முன்னேற்றத்தில் பெண்களின் பங்கே முக்கியம்

## குரும்பசிட்டியில் திருமதி நிகிடின் உரை

குரும்பசிட்டி, வியாழன்

"சோவியத் நாட்டின் பொருளாதார விருத்திக்கு பெண்கள் விவசாயம், கைத்தொழில் போன்ற துறைகளில் ஆண்களுடன் சரிநிகராக தொழில் புரிகின்றனர். மேஜர் யூரி ககாரின் போன்றோரை வான வெளிக்கு அனுப்புவதில் சோவியத் மக்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளில் கூட பெண்களின் பங்கே மிக முக்கியமானதாகும். ஏனெனில் மொத்தம் தொழில் புரிந்தோரில் நாற்பத்தொன்பது வீத மானோர் பெண்களேயாவார்கள்." இவ்வாறு இலங்கையிலுள்ள சோவியத் ரஷ்யா ஸ்தானிகரின் முதல் காரியதரிசியின் பாரியார் திருமதி விலாடிமீர் எம். நிகிடின் குரும்பசிட்டி உதயதாரகை சனசமூக நிலையத்திற்கு விஜயம் செய்தபோது "சோவியத் நாட்டில் பெண்கள்" என்னும் பொருள் பற்றி பேசுகையில் குறிப்பிட்டார்.

குரும்பசிட்டி கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இவ் விழாவிற்கு பல்கலைக்கழக மாணவன் திரு. சி. நடராஜா தலைமை வகித்தார்.

திருமதி நிகிடின் தொடர்ந்து பேசுகையில் "சோவியத் ரஷ்யாவில் மதக் கொள்கைக்குப் பூரண சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது எனவும் மக்கள் தமது பூரண சுதந்திரத்துடன் தாம் விரும்பும் மதக் கொள்கையைப் பின்பற்ற வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளதெனவும்" தெரிவித்தார்.

மேற்படி விழா முடிவடைந்ததும் திரு. நிகிடின் தம்பதிகள் சனசமூக நிலையத்தைப் பார்வையிட்டு மிகவும் திறமையாக இயங்கும் இந்தகைய நிலையங்களுக்கு உதவிசெய்ய சோவியத் அரசாங்கம் எப்பொழுதும் விரும்புகிறது எனத் தெரிவித்து பல புஸ்தகங்களையும் அன்பளிப்பு செய்தனர்.

## இன்று

மானிப்பாய், வியாழன்

நவாலியூர் கதிர்காம முருகப் பெருமான் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை எட்டு மணிக்கு திவ்விய ஜீவன சங்கத்தாரால் ஓர் கூட்டு வழிபாடு நடாத்தப்படும்.


இப்பொழுது திரையிடப்படுகிறது.

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

கெப்பிட்டல் (கொழும்பு) சபையர் (வெள்ளவத்தை) விஜயா (மட்டக்களப்பு)

வெலிங்டன - மனோகரா (யாழ்ப்பாணம்) வெர்பினி (கண்டி)

ஸ்ரீ கிருஷ்ணு (திருக்கோணமலை) மோடர்ன் (பதுளை) லக்ஷ்மி (ரத்தனபுரி)

விஜிதா (மஸ்கெலியா) தீவொளி (நுவரெலியா) ஜெமினி (ராகல)

- இலட்சியங்கள் தான் மனித வாழ்வில் நிலைத்து நிற்கின்றன, என்ற அடிப்படையிலே உருவாகி...
- இன்ப வாழ்வுக்கு, இதய நிறைவுக்கு காதலே ஆதாரம் என்று ஒளி காட்டி....
- ஒன்றுபட்ட இல்லறத்திலேதான் உள்ள அமைதி பிறக்கும் என்பதை நிலை நிறுத்தி....
- பிரிவிலே ஏற்படுகின்ற வேதனை மிகமிகப் பொல்லாதது என்று எடுத்துக் காட்டி....
- இன்பக் காட்சிகளும், இனிய பாடல்களும் இணைந்த காதல் காவியமாக, உங்கள் இதயத்தைக்கொள்ளைகொள்ள வந்திருக்கிறது....



சிவாஜி கணேசன்-சரோஜாதேவி
எம். ஆர். ராதா - சௌகார் ஜானகி
நடித்த
பாலும் பழமும்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 20-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

ஆசிரியருக்கு கடிதம்

# நாவற்குழி கிராம சபை

நாவற்குழி கிராமச்சபை 10,000 மக்கள் கொண்ட பெரும் பகுதியுடையது. பல கிராமங்கள் சேர்ந்தது. இதற்கென கட்டிடம் ஒன்று நல்ல நிலையிலிருக்கிறது. இக்கிராம சபையின் லிகிதர் தச்சன் தோப்பு உப தபாற் கந்தோர் அதிபராகவும் இருக்கிறார். அவரின் வசதிக்காக சபை அலுவலகம் தாபாற்கந்தோருக்கு அருகாமையில் லிகிதரின் சொந்தக் கட்டிடத்தில் நடத்துகிறார்கள். சபை கூட்டங்கள் வேறு இரு இடங்களில் நடக்கின்றன. இப்போது அலுவலகம் இருக்குமிடமும், அதில் லிகிதர் கடமையாற்றும் முறையும் பொது மக்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஒரே நேரத்தில் ஒருவர் இரு வேலைகளை எவ்வாறு நல்ல முறையில் செய்ய முடியும்? இதனை அரசாங்கம் இன்னமும் உணராதது கவலைக்கிடமானது. முன்னேறிய இக்காலத்தில் இவ்விதமான நிலையை நீடிக்க விடுவதால் இக் கிராமச்சசைப்பகுதி முன்னேற்றமடைய முடியாது. கிராமத்தில் அக்கறையும், முன்னேற்றமும் உள்ள கிராமசபை அங்கத்தவர்கள், இவ் விஷயத்தில் ஊக்கமெடுத்து முழுநேரமும் வேலை செய்யக் கூடிய ஒரு லிகிதரை நியமித்து சொந்தக்கட்டிடத்தில் அலுவலகம் நடைபெற நடவடிக்கை எடுப்பார்களாக. அரசாங்கமும் இதனைக் கவனிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இ. வேலாயுதர்,
தலைவர், கைதடி வ. கி. மு. சங்கம்

## சித்தாந்தம் ஆசிரியர் யாழ்ப்பாணம் விஜயம்

யாழ்ப்பாணம், வியாழன்

சென்னை சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் 'சித்தாந்தப்' பத்திரிகை ஆசிரியரும், சென்னை கிறிஸ்தவக் கல்லூரி தமிழ்த்துறைப் பேராசிரியருமான புலவர் திரு. ரா. முருகவேல் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ் செய்ய விருக்கிறார். கொழும்பு விவேகானந்த சபை நடத்தும் திருமுறை விழாவிற் கலந்து கொள்ள இலங்கை வரும் பேராசிரியர், அகில இலங்கைச் சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கத்தினரின் அழைப்பை ஏற்று யாழ்ப்பாணம் வரவிருக்கின்றார்.

## ஸ்ரீமதி வயலட் ஆல்வா

புதுடில்லி, ஏப்ரல் 19

ஸ்ரீமதி வயலட் ஆல்வா, ராஜ்யசபையின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். லோகசபையில் சபாநாயகர் வராதபட்சத்தில், தலைமை வகிக்கு முகமாக 5 பேர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யிருக்குமென்றும் சொன்னார். என்ன செய்யலாம்!

* * *

அற்புதங்கள் பல புரிந்தாய்
நின்னைத்தேடி
அண்டினருக்கு அனுதாபம்
காட்டி நின்றாய்
எற்பாலும் அன்புருகிக்
கசிந்தாயென்றும்
இனிய மெதுவான மொழி
இயம்பலானாய்
பொற்பாத சுவடுலகம் போற்ற
நின்றாய்
போன வுயிர் மீண்டுவரப்
புதினஞ் செய்தாய்
வெற்போதி முகிலேறிப்
பரலோகத்தை
மீண்டடைந்தாய் குருநாதா
சரணம் நீயே

—கிறிஸ்தவ பஞ்சாமிர்தம்

# கான கைத்தொழில் மந்திரி பதவி நீக்கம்

## மனைவியின் தங்கக்கட்டி காரணம்?

ஆக்ரா, ஏப்ரல் 19

கானு கைத்தொழில் மந்திரி திரு. எண்டோஸியை ஜனாதிபதி நிக்ருமா, பதவி நீக்கம் செய்துவிட்டார். கைத்தொழில் மந்திரியின் மனைவி 3000 பவுன் பெறுமதியான தங்கக் கட்டியொன்றை வாங்கியிருப்பது குறித்து மக்களிடையே ஏற்பட்ட கண்டனத்தைத் தொடர்ந்து, டாக்டர் நிக்ருமா இந்நடவடிக்கையை எடுத்துக் கொண்டதாயும், மந்திரி புதிதாக அமைந்துள்ள கண்கவர் மாளிகையையும் அரசாங்கம் எடுத்துக்கொண்டுவிட்டதாயும் அறிவிக்கப்படுகிறது. இம்மாளிகையைக் கட்டிய இத்தாலிய கொந்தராத்துக்காரர் நாட்டைவிட்டு வெளியேறும்படி கோரப்பட்டுள்ளாராம்.

## வீதியின் சீர்கேடு

வேலணை, வியாழன்

பண்ணை - வேலணை மராமத்து இலாகா வீதி, சீர் கெட்ட நிலையில் இருப்பதால் பொது மக்களுக்கு பெரிதும் கஷ்ட மேற்பட்டுள்ளது. இது சம்பந்தமாக அதிகாரிகளுக்கு பல முறை அறிவித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை எனத் தெரிகிறது.

கால தாமதமின்றி இதில் நடவடிக்கை எடுக்கும் படி வேலணை கிராம சபைத்தலைவர் திரு. ப. கந்தசாமி, போக்கு வரத்து மந்திரிக்கும், ஊர்காவற்றுறை எம். பி. க்கும் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் கடித மூலம் தெரிவித்துள்ளார்.

## விவசாயத்தில் ஈடுபடுக

### பிரிவுபசாரத்தில் பேச்சு

மட்டக்களப்பு, வியாழன்

"இன்றைய நிலையில் நாம் வேறு உத்தியோகத்தை எதிர்பார்த்துக் கொண்டிப்பதை விட, விவசாயத்தில் ஈடுபடுவது தான் நல்லது. நாம் விவசாயத்தில் ஈடுபடுவதன் மூலம், நமக்கு நல்ல வருவாயைத் தேடிக் கொள்வதோடு, நாட்டின் பொருளாதார உயர்ச்சிக்கும் உதவி செய்பவர்களாவோம்."

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட விவாசாயப் போதனாசிரியராகக் கடமையாற்றிய திரு. அ. பேரின்பநாயம் அவர்கள்பொரல்லநறுவைக்கு இடமாற்றம் செய்யப்பட்டதையிட்டு காத்தான்குடி இளைஞர் விவசாயக்கழகத்தினால் நடத்தப்பட்ட பிரியாவிடை வைபவத்தில் உரை நிகழ்த்துகையில், ஜனாப் ஏ. அகமது லெப்பை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனாப். எம். முகைதீன் தலைமையில் நடைபெற்ற இப் பிரிவுபசார வைபவத்தில் பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். சிற்றுண்டி விருந்தின் பின்னர் தமக்களிக்கப்பட்ட பிரியாவிடைக்கு நன்றி தெரிவித்து திரு. அ. பேரின்பநாயகம் பேசினார்.

# காஞ்சி எம். எல். ஏ. வீட்டில் தீ விபத்து

காஞ்சிபுரம், ஏப். 19

காஞ்சிபுரத்தில் அசெம்பிளி மெம்பர் ஸ்ரீ எஸ். வி. நடேச முதலியார் வீட்டின் பின் பகுதி கொளுத்தப்பட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது. சில விஷமிகள் தீவைத்திருக்கக் கூடுமென சந்தேகிக்கப்படுகிறது. தகவல் அறிந்தவுடன் பொலிஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ராகவாச்சாரி ஸ்தலத்திற்கு விரைந்தார். தீயணைக்கும் படையினர் உதவியுடன் தீயணைக்கப்பட்டது.

வீட்டின் பின்பகுதியிலிருந்த ரூ 5000 மதிப்புள்ள மரச்சாமான்கள் அதன் விளைவாக சேதமடைந்தன.

விஷமிகள் வீட்டின் பின்கட்டுக்குள் நுழைந்து பெட்ரோலை ஊற்றி தீ வைத்திருக்கக்கூடுமென சந்தேகிக்கப்படுகிறது.

## வீண் பேச்சுக்களில் பயனில்லை

ஹொன்வெல, வியாழன்

"குருவத்தை" மக்களின் குறை நிறைகளைப் பேசிக் கொள்வதால் நாட்டுக்கும் ஒரு நன்மையில்லை வெறும் பேச்சுகளினால் மட்டும்நாடு முன்னேற முடியாது. மக்கள் தம்மைத் தாமே திருத்திக்கொள்ளப் பழக வேண்டும்.

இவ்வாறு பௌத்த காங்கிரஸின் தலைவர் சேர். லலிதா ராஜபக்சே ஸ்ரீ குணரத்ன தஹாம்பசேல கஹேன பரிசளிப்பு விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் கூறினார்.

## ஜூன் 18-ல் கானடா பொதுத் தேர்தல்

ஒட்டாவா, ஏப்ரல் 19

ஜூன் மாதம் 18-ம் திகதி பொதுத் தேர்தலை நடத்துமுகமாக பார்லிமெண்டைக் கலைக்குமாறு கானடா பிரதமர் திரு. டீபன் பேக்கர் இன்று கவர்னர் ஜெனரலைக் கோருவார்.

புங்குடுதீவு, வெள்ளி

புங்குடுதீவு கிழக்கு கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜேஸ்வரி அம்பாள் கோவில் பூங்காவன அலங்கார உற்சவமும் தெப்பத்திருவிழாவும் இன்று வெள்ளிக்கிழமை இரவு நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது. விசேட அபிஷேகமும் பூசைகளும் நடைபெறும்.

மேளவாத்திய இசைக்கச்சேரிகளும் "சிலம்புத் தெய்வம்' பற்றி கதாப்பிரசங்கமும் நடைபெறும்.

கூப்பன் இல: 8

## வடமாகாண கிரிக்கெட் வீரர் 1962

'விக்னராஜா' பரிசுக் கிண்ணத்துக்காக 'ஈழநாடு' நடாத்தும் தெரிவு.

1962-ம் ஆண்டின் வடமாகாண கிரிக்கெட் வீரராகப் பின்வருபவரை நான் தெரிவு செய்கின்றேன்.

கிரிக்கெட் வீரர் ....................

கல்லூரி ....................

எனது பெயர் ....................

விலாசம் ....................

* இக்கூப்பனைக் கத்தரித்து 'கிரிக்கெட் வீரர் 1962', C/o. 'ஈழநாடு', தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்புக.